
सर्वज्ञानोत्तरम्

आत्मसाक्षात्कारप्रकरणम्



SARVAJNANOTTARAM

AtmaSakshatkaraPrakaranam

Rendered into Tamil by Sri Ramana Maharshi
with original Sanskrit text and English translation

Sarva Jnanottaram –
Atma Sakshatkara Prakaranam

(Rendered into Tamil
by Bhagavan Sri Ramana Maharshi)

(Original Text (Sanskrit) in Sri Bhagavan's Handwriting and Tamil text: with split-up (Padachchedana) and meaning. Transliteration for Sanskrit text also provided.)

SRI RAMANASRAMAM
TIRUVANNAMALAI

© Sri Ramanasramam
Tiruvannamalai

First Edition - 1999 - 1000 copies

CC No.: 3712

Published by
V.S. Ramanan
President,
Sri Ramanasramam
Sri Ramanasramam P.O.
Tiruvannamalai - 606 603.

Price Rs. 30/-

Cover : Ink sketch of Sri Ramana Maharshi
by Franz Fassbender

Laser Typeset by
Replika, Chennai - 600 004.

Printed by
Kartik Offset Printers
Chennai - 600 015

PUBLISHER'S NOTE

Sarva Jnanottara is an ancient text from the Sanskrit Saiva Agamas, and contains the *Atma Sakshatkara Prakaranam,* where spiritual instruction is imparted to Guha (Subrahmanya) by Iswara (Siva) Himself.

Sri Bhagavan rendered this prakaranam into Tamil verse (in venba metre) in the present Ashram some years after his similar versification of *Devikalottara – Jnanachara Vichara Patalam* (another Agamic text) during his Virupaksha days.

The Ashram had in 1998, brought out the *Jnanachara Vichara* (contained in *Devikalottaram*) as a separate booklet with Sanskrit and Tamil text and meaning.


We are now happy to publish *Atma Sakshatkaram* (contained in *Sarva Jnanottara*) with the original Sanskrit text in SRI BHAGAVAN'S HANDWRITING. Also provided are the Sanskrit paraphrase (*padachchedana*); and transliteration and meaning in English. Bhagavan's Tamil verses are accompanied by paraphrase and meaning in Tamil. The Tamil and English meaning are largely adapted from Sri Muruganar and Dr H. Ramamurthy respectively.

The variant Sanskrit text of verse 47 is also given, to show how Bhagavan incorporated both ideas in one Tamil verse.

May Sri Bhagavan shower his blessing on us all. May the readers benefit from the practice of the subtle *sadhana* in this rare text.

Sri Ramanasramam
Tiruvannamalai
14th April 1999

V.S. Ramanan
President



ஓம்
நமோ பகவதே ஸ்ரீ ரமணாய

श्री सर्वज्ञानोत्तरे
"स्वात्मसाक्षात्कार प्रकरणम्"

ஸ்ரீ
சர்வ ஞானோத்தரம்
ஆன்ம சாட்சாத்காரப் பிரகரணம்

சிறப்புப் பாயிரம்*

(நேரிசை வெண்பா)

ஆன்ம சமான வருமைக் குமரனுக்கன்
ருன்ம சொரூபசிவ ஞய்ந்துரைத்தான் – மேன்மை
தகுசருவ ஞானேத் தரப்பகுதி யைச்சீர்
மிகுரமண மாமுனிவன் மீண்டு.

ஆன்ம சமான அருமைக் குமரனுக்கு அன்று
ஆன்ம சொரூப சிவன் ஆய்ந்து உரைத்தான் மேன்மை
தகு சர்வ ஞானேத்தரப் பகுதியைச் சீர்மிகு
ரமண மாமுனிவன் மீண்டு

தத்தமெய் யான்மசாட் சாத்காரந் தாமடையக்
கைத்தலநெல் லிக்கனியாக் கட்டுரைத்தான் – சுத்த
சிவமயமாய் நின்றவருட் செல்வன்றன் னன்பர்
பவமயல் சாயப் பரிந்து.

தத்தம் மெய்யான்ம சாட்சாத்காரம் தாம் அடைய
கைத்தல நெல்லிக்கனியாய் கட்டுரைத்தான் சுத்த
சிவமயமாய் நின்ற அருட் செல்வன் தன் அன்பர்
பவமயல் சாயப் பரிந்து.

---

* இஃது ஸ்ரீ முருகனார் இயற்றியது.

பொழிப்புரை: ஆன்ம சொரூபமான சிவன் ஆன்ம சமானமான தன்னருமைக் குமரனுக்கு சருவஞாஞ்ஞேத்தர மென்னும் உபாகமத்தை முன்பு ஆய்ந்துரைத்தான். அத்தகைய சுத்த சிவமயமாய் நிலைத்த சீர்மிக்க அருட் செல்வனும் மாமுனிவனுமாகிய ரமணன் தன்னன்பர்க்கு அன்னூர்தம் பிறவி மயக்கங் கெடவும் தத்தம் நிஜ சொரூபமான ஆன்ம சாட்சாத்காரத்தைத் தாமடையவும் திருவுளமிரங்கி, மேன்மைப் படத்தக்க அதன் பகுதி (ஆன்ம சாட்சாத்காரப் பிரகரணம்) யாகிய இதனைக் கரதலாமலகம் போலத் தெளியப் பின்பு உறுதிப்பட உரைத்தான் என்க.

விசேடவுரை: கனியாயடைய எனவும் பரிந்து சாய எனவும் கூட்டலுமாம். பரிந்து சாய்தல் - விரைந்தழிதல்.

மங்கலம்

ஆன்மாவா மீசன் குகனுக் கருள்செய்த
வான்மசாட் சாத்கார மாகுமீ – தான்மாவா
யென்னகத் தேயிருந் தின்றுதமிழ் சொல்வானம்
முன்னவ ஞய முதல்.

ஆன்மாவாம் ஈசன் குகனுக்கு அருள் செய்த
ஆன்ம சாட்சாத்காரம் ஆகும் ஈது ஆன்மாவாய்
என்னகத்தே இருந்து இன்று தமிழ் சொல்வான் அம்
முன்னவஞய முதல்.

பொழிப்புரை : ஆன்மாவாகிய இறைவன் (தன்னருமைக் குமரனுகிய) குகனுக்கு அன்று வடமொழியிலருளிய இவ்வான்ம சாட்சாத்காரப் பிரகரணத்தை முன்னவனுகிய அம்முதல்வனே ஆன்மாவாய் என்னுள்ளத்திருந்து இன்றும் அன்பர்க்குத் தமிழில் மொழிபெயர்த் தருள்வான்.

விசேடவுரை : அகரத்தைப் பலரறி சுட்டாகக் கொண்டு, முன்னவனென்பதற்கு மூத்தபிள்ளையாரென்றும் அடியரிட ரகற்றி இட்டசித்தி யெய்துவிப்பதில் இறைவரெல்லாரினும் முன்னவ னென்றும் கூறினு மமையும்.

This is the Direct Awareness of the self -
Graciously expounded to Guha by Isvara Himself,
The foremost and first Lord, now teaching this in Tamil
Seated as the Self in my heart.

श्री गणेशायनमः

अथ

श्री सर्वज्ञानोत्तरे ,
स्वात्मसाक्षात्कारप्रकरणं

श्री अरुणाचलम्

ईश्वर उवाच ॥
अथान्यं संप्रवक्ष्यामि
हृुपायं तत्वतो गुह ॥
अग्राह्यस्यापि सूक्ष्मस्य
सर्वगस्यतु निष्कलम् ॥१॥

अथ अन्यं संप्रवक्ष्यामि हि उपायं तत्त्वतः गुह ।
अग्राह्यस्य अपि सूक्ष्मस्य सर्वगस्य तु निष्कलम् ॥

Athānyam sampravakshyāmi hyupāyam tatvato guha
agrāhyasyāpi sūkshmasya sarvagasya to nishkalam

அன்னசிவன் பின்னு மருள்வான் குகனேநிற்
கன்னியஞ் சூட்சி யறைவன்மெய் – மன்னவே
நிட்களமா யாவுளுமே நிற்பதாய் நுட்பமதா
யுட்கொள்ளப் போகாதே னும்.

அன்ன சிவன் பின்னும் அருள்வான் குகனே நிற்கு
அன்னியம் சூட்சி அறைவன் மெய் மன்னவே
நிட்களமாய் யாவுளுமே நிற்பதாய் நுட்பமதாய்
உட்கொள்ளப் போகாதேனும்.

பொழிப்புரை : *அத்தகைய சிவன் (தன்னருமைக் குமரனை நோக்கி) மீண்டுஞ் சொல்வான்; வீட்டியல் நிட்களமும், எல்லாவற்றுள்ளும் பரவி நிற்பதும், நுட்பமும் அதனால் மனத்தாற் பற்ற முடியாததுமாயினும் குகனே! அவ் வீட்டு நிலைசார வேறோ ருபாயம் ஒருவாற்றானுனக்குச் சொல்வன்.*

That Siva further says:-

Guha! I shall tell you about a different way
To reach that Reality which pervades partless in all,
Too subtle, though, to be grasped (by the mind). (1)

येन विज्ञायते सम्यक्
यँज्ज्ञात्वातु शिवो भवेत् ॥
नकस्यचि न्मया ख्यातम्
तद्विज्ञानं शृणुष्वमे ॥३॥

येन विज्ञायते सम्यक् यत् ज्ञात्वा तु शिवः भवेत् ।
न कस्यचित् मया आख्यातं तत् विज्ञानं शृणुषु एव मे ॥

Yena vijñāyate samyak yajjñātva thu śivo bhavet
na kasyachin mayākhyātam tadvijñānam śruṇushvame

எதனு லனுபவமா ஞானநன் கெய்து
மெதனீயறிந் தோன்சிவ னேயா – மெதெவர்க்கு
மென்னுற் சொலப்பட்ட தின்றவ்விஞ் ஞானத்தை
யென்னிடத்தி னின்றுகே ளின்று.

எதனுல் அனுபவமா ஞானம் நன்கு எய்தும்
எதனீ அறிந்தோன் சிவனே ஆம் எது எவர்க்கும்
என்னுல் சொலப்பட்டது இன்று அவ்விஞ்ஞானத்தை
என்னிடத்தினின்று கேள் இன்று.

பொழிப்புரை: எதனுல் அபரோக்ஷ ஞானம் நன்முயுண்டாகுமோ, எதனீயறிந்தோன் சிவனே யாவனு, எது எவர்க்கும் இதுவரையில் என்னுற் சொல்லப்பட வில்லீயோ, அந்த விஞ்ஞானத்தை நீ இன்று என்னிடத்தி னின்று கேட்பாயாக.

By which the knowledge of Awareness is well attained,
Knowing which is to become Siva Himself,
What has not been told to any by me,
Today, from me, that wisdom, hear ! (2)

गुरु परंपरा यातम्
अदृष्टं सर्व वादि भिः॥
अवंच्य विमो क्षार्थम्
परमं सर्वतो मुखम् ॥३॥

गुरु परंपरा आयातम् अदृष्टं सर्व वादिभिः ।
भव बंध विमोक्ष अर्थं परमं सर्वतः मुखम् ॥

Guru paramparāyātamadṛshtam sarva vādibhiḥ
bhava bandha vimokshārtham paramam sarvatomukham

ஈதுகுரு பாரம் பரியத்துப் போந்ததாம்
வாதிகளெல் லாங்காண வாய்க்காதா – மீதுபவ
பந்தமுத் திப்பொருட் டாம்பரம மாமுகமோ
வெந்தத் தலத்துமுள தே.

ஈது குரு பாரம்பரியத்துப் போந்ததாம்
வாதிகள் எல்லாம் காணவாய்க்காதாம் ஈதுபவ
பந்த முத்திப் பொருட்டாம் பரமமாம் முகமோ
எந்தத் தலத்தும் உளதே.

பொழிப்புரை: *இவ்விஞ்ஞானம் குருபரம்பரையில் வந்ததும், வாதிகளெவராலுங் காணக்கிடையாததும், பவபந்த விடுதலையாய் பயனுடையதும், யாவற்றினும் சிறந்ததும், எவ் விடத்தும் முகமுள்ளது மாகும்.*

Handed down by the lineage of gurus,
And beyond the ken of logicians,
This is for liberation from the bondage
of the birth-death cycle.
Its supreme vision shines at all places. (3)

यो सौ सर्वगतो देवः
सर्वात्मा सर्वतोमुखः ॥
सर्वतत्व मयोऽचिंत्यः
सर्वस्यो परि संस्थितः ॥४॥
सर्वतत्व व्यतीतश्च
वाङ्मनो नाम वर्जितः ॥
सोऽहमेव मुपासीत
निर्विकल्पेन चेतसा ॥५॥

यः असौ सर्वगतः देवः सर्वात्मा सर्वतः मुखः ।
सर्व तत्त्वमयः अचिन्त्यः सर्वस्य उपरि संस्थितः ॥

सर्व तत्त्व व्यतीतः च वाक् मनो नाम वर्जितः ।
सः अहं एवं उपासीत निर्विकल्पेन चेतसा ॥

Yo'sau sarvagato devaḥ sarvātma sarvatomukhaḥ
sarva tatva mayo'chintyaḥ sarvasyopari samsthitaḥ

Sarva tatva vyatītascha vāñ mano nāma varjitaḥ
so'hamevamupāsita nirvikalpena chetasā

எவனெல்லா வற்று மிருக்குமித் தேவ
னெவனெல்லா மாகி யிருப்ப – னெவன்முக
மெங்குமுளா னெண்ணவொணன் றத்துவமெல்
[லாந்தானுய்த்
தங்கியெலா மிஞ்சியுளன் ருன்.

தத்துவங்க ளெல்லாமுந் தான்கடந்தோன் வாக்கோடு
சித்தமு நாமமுஞ் சேராதா – னத்த
னவனு னெனவிகற்ப மற்றசித் தத்தாற்
சிவசிந் தனேயேநீ செய்.

எவன் எல்லாவற்றும் இருக்கும் இத்தேவன்
எவன் எல்லாமாகி இருப்பன் எவன் முகம்
எங்கும் உளான் எண்ணவொணன் தத்துவம்
எல்லாம் தானுய்
தங்கி எலாம் மிஞ்சி உளன் தான்.

தத்துவங்கள் எல்லாமும் தான் கடந்தோன் வாக்கோடு
சித்தமும் நாமமும் சேராதான் அத்தன்
அவன் நான் என விகற்பமற்ற சித்தத்தால்
சிவ சிந்தனையே நீ செய்.

4 & 5 பொழிப்புரை: *எந்தத் தேவன் எல்லாவற்றிலும் நிறைந்திருப்பனே, எல்லாவற்றுக்கும் ஆன்மாவாயிருப்பனே,*

எங்கும் முகமுள்ளவனே, நினைக்க முடியாதவனே, எல்லாத் தத்துவங்களும் தானேயாத் தங்கி (பிறவெல்லா மழியவும் தான் மட்டு மழியாது) மிஞ்சியுள்ளவனே.

(எவன்) எல்லாத் தத்துவங்களையுந்தான் கடந்தவனே, வாக்கு மனமும் பெயரும் இல்லாதவனே, அந்தப் பரமனே நான் என நிர்விகற்ப சித்தத்தால் நீ சிவத்தியானஞ் செய்யக் கடவை.

He who is the one pervading in all things,
He who has manifested as All,
He who has faces in all directions,
who is beyond thought,
Who remains Himself as all the verities
and transcends them too, is the Self. (4)

He transcends all verities,
He is beyond the reach
of speech and mind, and name
"I am That (Siva-Self)"
thus you should meditate
With perfectly undifferentiated mind, on Siva. (5)

यदेव निष्कलं ज्ञानम्
शाश्वतं ध्रुव मव्ययम् ॥
निर्विकल्प मनिर्देश्यम्
हेतु दृष्टांत वर्जितम् ॥ ६ ॥.

यत् एव निष्कलं ज्ञानं शाश्वतं ध्रुवं अव्ययम् ।
निर्विकल्पं अनिर्देश्यं हेतु दृष्टान्त वर्जितम् ॥

Yadeva nishkalam jñānam śāśvatam dhruvamavyayam
nirvikalpamanirdeśyam hetu dṛshtānta varjitam

என்றுமுள தாய்நிலையா யவ்வயமா யெவ்விகற்பு
மின்றியதா யின்னதென வெண்ணவொணு –
[தொன்றியுள
நிட்களமா ஞான மெதுதா னிகழுமுத
றிட்டாந்த மின்றியதாய்த் தேர்.

என்றும் உளதாய் நிலையாய் அவ்வயமாய் எவ்விகற்பும்
இன்றியதாய் இன்னது என எண்ணவொணுது ஒன்றியுள
நிட்களமா ஞானம் எதுதான் நிகழும் முதல்
திட்டாந்தம் இன்றியதாய் தேர்.

பொழிப்புரை: பொருந்தியுள்ள எந்த நிஷ்கள ஞான சொரூபம் என்றுமுள்ளதாய், நிலைபெற்றதாய், குறைவற்றதாய், எவ்விகற்பமு மில்லதாய், இதுவென மனத்தாற் சுட்டப்படாத தாய் நிகழுமோ, அதனைக் காரண வுவமைகளற்றதா யறி.

Firmly established as the eternal entity,
Imperishable and undifferentiated
The all pervasive partless Knowledge
that cannot be fathomed by the mind,
It shines, with nothing prior to compare. (6)

अलिंगमक्षरं शांतम्
विषयातीत गोचरम्॥
अविभाव्य मसंदेहम्
तदहं नात्र संशयः॥ ७॥

अलिङ्गम् अक्षरं शान्तं विषयातीत गोचरम् ।
अविभाव्यं असंदेहं तत् अहं न अत्र संशयः ॥

Alin gamaksharam śāntam vishayātīta gocharam
avibhāvyamasandeham tadaham nā'tra samśayaḥ

அடையாள மற்றழிவற் ருருமுப சாந்தம்
விடயங் கடந்தொளிர் வேத்ய – மடுக்காது
பாவனைக் கையம் படரா ததுவேநா
ஞவனிதி லைய மிலை.

அடையாளம் அற்று அழிவு அற்று ஆரும் உபசாந்தம்
விடயம் கடந்து ஒளிர் வேத்யம் அடுக்காது
பாவனைக்கு ஐயம் படராது அதுவே நான்
ஆவன் இதில் ஐயம் இல்லை.

பொழிப்புரை: மேலும் குறியற்று அழிவற்று நிறையு முபசாந்தமாய், விடயங்கடந்து விளங்கும் விடயமாய், பாவனைக் கெட்டாததாய் ஐயமெழாததுமாமோ, அதுவே நானுவன். இதில் ஐயமில்லை.

Devoid of any marks, indestructible,
the totally serene
The knowledge
transcending all objects,
Beyond the pale of thought
and conception and doubt,
That (Supreme) I am, no doubt about this. (7)

अहमेव परो देवः
सर्व मन्त्र मय शिवः॥
सर्व मन्त्र व्यतीतश्च
सृष्टि संहार वर्जितः॥ ७॥

अहं एव परः देवः सर्व मन्त्रमयः शिवः ।
सर्वमन्त्र व्यतीतः च सृष्टि संहार वर्जितः ॥

ahameva parodevah sarvamantra mayaḥ sivaḥ
sarvamantra vyatītascha sṛshṭi samhāra varjitaḥ

அந்தப் பரதெய்வ மாகுஞ் சிவனுனே
மந்திரங்கள் யாவின் மயனுமம் – மந்திரங்க
ளெல்லாங் கடந்தே யிலய சிருட்டிக
ளில்லா தவனுமா மே.

அந்தப் பரதெய்வம் ஆகும் சிவன் நானே
மந்திரங்கள் யாவின் மயனும் அம் மந்திரங்கள்
எல்லாம் கடந்தே இலய சிருட்டிகள்
இல்லாதவனுமாமே.

பொழிப்புரை: அந்தப் பரதெய்வமாகும் சிவனும், எல்லா மந்திரங்களின் வடிவமாவோனும், அம் மந்திரங்க ளெல்லாங் கடந்து ஆக்கலழித்தல் அற்றவனும் நானே யாம்.

விசேடவுரை : ஆதலழிதல் என்றுமாம்.

That Supreme divinity, Siva, indeed am I,
Of the nature of all the mantras,
And transcending all the mantras,
Devoid of dissolution and creation. (8)

मयाव्याप्त मिदं सर्वम्
दृश्याऽदृश्यं चराचरम्॥
अहमेव जगन्नाथो
मत्तस्सर्वम् प्रकाशते ॥९॥.

मया व्याप्तं इदं सर्वं दृश्य अदृश्यं चर अचरम् ।
अहं एव जगन्नाथः मत्तः सर्वं प्रकाशते ॥

mayā vyāptamidam sarvam dṛśyā'dṛśyam charācharam
ahameva jagannātho mattas sarvam prakāśate

திருசியஞ் சூன்யந் திரஞ்சரமு மென்ஞற்
பரவிடப் பட்டன வாமிச் – சருவமு
நானே யுலகத்தி ஞதனெல் லாமென்ஞற்
ருனே யிலகுவன தாம்.

திருசியம் சூன்யம் திரம் சரமும் என்ஞல்
பரவிடப்பட்டனவாம் இச் சருவமும்
நானே உலகத்தின் நாதன் எல்லாம் என்ஞல்
தானே இலகுவன தாம்.

பொழிப்புரை: காண்பதும் காணப்படாததுமான இவ் வெல்லாச் சராசரங்களும் என்னுல் நிறையப் பெற்றனவாம். நானே யுலகங்களுக் கெல்லாம் தலைவன். அவையாவும் என்னுலேயே விளங்குவனவாம்.

What is visible, what is invisible,
the moving and the stationary,
All these are pervaded by me.
I am the Lord of this universe,
All shine because of me. (9)

अनेकाकार संभिन्नम्
विश्वं भुवन संचयम् ॥
शिवाद्यवनि पर्यंतम्
तत्सर्वम् मयि संस्थितम् ॥ १०॥

अनेक आकार संभिन्नं विश्वं भुवनसंचयम् ।
शिव आदि अवनि पर्यन्तं तत् सर्वं मयि संस्थितम् ॥

anekākāra sambhinnam viśvam bhuvanasanchayam
śivādyavani paryantam tatsarvam mayi samsthitam

விவித வுருவத்தால் வேறுவே ருய
புவன நிரைகள் பொருந்திச் - சிவமுத
லிவ்வுலக மீரு யிலகும் பிரபஞ்ச
மவ்வளவு மென்னினிற்ப வாம்.

விவித உருவத்தால் வேறு வேரூய
புவன நிரைகள் பொருந்திச் சிவம்முதல்
இவ்வுலகம் ஈரூய் இலகும் பிரபஞ்சம்
அவ்வளவும் என்னில் நிற்பவாம்.

பொழிப்புரை: நானுவித வடிவத்தாற் பல்வேறு வகைப் பட்ட புவனக் கூட்டமும், இறைவன் முதல் இவ்வுலகு பரியந்தம் விளங்கும் பிரபஞ்ச மனைத்தும் என்னிடத்தே பொருந்தி நிலைத்திருப்பனவாம்.

விசேடவுரை: புவனப் பிரபஞ்சங்கள் முறையே சங்கே தத்தாற் பகுதி தொகுதிகளைக் குறிப்பனவாகக் கொள்க.

Filled with a variety of forms,
one different from the other,
Filled with a galaxy of worlds,
All this universe, from Siva down to the earth,
Are all established in me. (10)

यच्च किंचि ज्जगत्यस्मिन्
दृश्यते श्रूयतेऽपि वा ॥
बहिरंत र्विभागेन
[illegible] ॥ ११ ॥
व्याप्तं तत्सकलं मया ॥

यत् च किंचित् जगति अस्मिन् दृश्यते श्रूयते अपि वा ।
बहिः अन्तः विभागेन व्याप्तं तत् सकलं मया ॥

Yachcha kinchit jagatyasmin dṛśyate śruyate' pi vā
bahirantar vibhāgena vyāptam tatsakalam mayā

எவ்வளவு காணப் படுபவோ விவ்வுலகி
லெவ்வளவு கேட்க வியைபவோ – வுள்வெளி
பற்றியொளிர் யாவும் பராவுமென் ஞற்பரவ
லுற்றவை யாமவையென் ரூர்.

எவ்வளவு காணப்படுபவோ இவ்வுலகில்
எவ்வளவு கேட்க இயைபவோ உள்வெளி
பற்றி ஒளிர் யாவும் பராவும் என்னுல் பரவல்
உற்றவை யாம் அவை என்று ஓர்.

பொழிப்புரை: இவ்வுலகில் எவ்வெவை காணப் படுவனவோ அன்றி கேட்கப்படுவனவோ, உள்வெளி பற்றி விளங்கும் அவை யாவும் ஸர்வவியாபகமான என்னுல் வியா பிக்கப்பட்டனவா மென் றறி.

விசேடவுரை: சிறப்புப் பற்றி கண்டுகேட்கப் படு வனவே கூறினுரேனும், உபலக்ஷணத்தா லுண்டுயிர்த்துறப்

பெறுவனவும், உள்ளமும் ஒரேவழி ஞானேந்திரியங்களிற் சேர்த்தெண்ணப் படுதலாலும், உள் வெளி பற்றி யொளிர் யாவும் என்றதனாலும் உள்ளத் தாலுள்ளப் பெறுவனவும் உடன் கொள்க. இம் மூன்று திருவெண்பாவானும் ஆன்ம சொரூபமான சிவபரிபூரணம் கூறப்பட்டது.

Whatever is seen in this world,
Whatever is heard in this world,
Whatever shines, conceptualised as inside and outside,
All these are pervaded by me,
the all-pervading One,
Realise this. (11)

अहं आत्मा शिवो ह्यन्यः
परमात्मेति यस्स्मरन्॥ स्मरन्
[illegible] मोहादेवमुपास्तेसः
न शिवत्वमवाप्नुयात् ॥९३॥

अहं आत्मा शिवः हि अन्यः परमात्मा इति यः स्मरन् ।
मोहात् एवं उपास्ते सः न शिवत्वं अवाप्नुयात् ॥

Ahamātmā śivohyanyaḥ paramātmeti yaḥ smaran
mohādeva mupāstesaḥ na śivatva mavāpnuyāt

ஆன்மாயா னென்னினு மப்பர மான்மாவாய்த்
தான்மேவ வுன்னுசிவன் ருன்வேறு – மான்மேவி
யிவ்வா றுபாசிப்போ னெய்தான் சிவத்துவ
மவ்வாற்ற லாலென் றறி.

ஆன்மா யான் என்னினும் அப்பரமான்மாவாய்த்
தான் மேவ உன்னு சிவன் தான் வேறு மால்மேவி
இவ்வாறு உபாசிப்போன் எய்தான் சிவத்துவம்
அவ்வாற்றலால் என்று அறி.

பொழிப்புரை: தான் ஆன்மா எனவும், அப் பரமான்மா வாய்த் தானடையக் கருதும் சிவன் தன்னினும் வேறெனவும் இவ்வாறு மோகங் கொண்டு துவிதபாவத்தா லுபாசிப்போன் அவ்வுபாசனை வலியாற் சிவத்துவ மடையான் என்றறி.

விசேடவுரை: ஓதரிய துவிதமே யத்துவித ஞானத்தை யுண்டுபணு ஞானமாகும் என்ருன்றோர் கூறியாங்கு துவித பாவனை நாளடைவில் வலுப்பட்டு அத்துவித ஞானத்தை யுண்டாக்கல் வாயிலாயன்றி சிவத்துவ மடைவிக்கும் ஆற்றல் அதற்கு நேரே யில்லை என்பது கருத்து.

Though considering himself the Self,
He desires to attain That Siva, the Supreme Self,
as one apart.
Whoever contemplates on Siva thus in delusion,
Will not attain Siva-hood
by such contemplation – know this. (12)

शिवोन्य स्त्वहमेवान्यः
पृथग्भावं विवर्जयेत् ।
य शिव स्सोहमेवेति
अद्वैतं भावये त्सदा ॥१२॥

शिवः अन्यः तु अहं एव अन्यः पृथक् भावं विवर्जयेत् ।
यः शिवः सः अहं एव इति हि अद्वैतं भावयेत् सदा ॥

Śivo'nyastvahamevānyaḥ pṛthakbhāvam vivarjayet
yaḥ śivaḥ so'hameveti hyadvaitam bhāvayet sadā

அன்னிய ஞஞ்சிவ னன்னியஞ நேயென்னும்
பின்னபா வத்தைப் பெயர்த்திடுக – வன்னசிவ
ஞவன்யா னேயென்னு மத்துவித மாகுமிப்
பாவனையே யென்றும் பழகு.

அன்னியனும் சிவன் அன்னியன் நானே என்னும்
பின்ன பாவத்தைப் பெயர்த்திடுக அன்ன சிவன்
ஆவன்யானே என்னும் அத்துவிதமாகும் இப்
பாவனையே என்றும் பழகு.

பொழிப்புரை: (ஆதலால்) சிவன் என்னினும் வேறு, நானும் அவனினும் வேறு என்னும் வேறுபாட்டுணர்வை

ஒழித்தவனுய் அந்தச் சிவன் நானேயாம் என்னும் இவ்வத்துவித பாவனையையே நீ யென்றும் பழகு.

விசேடவுரை: நேரே சிவத்துவ மடைவிக்கும் ஆற்றல் பின்னபாவத்துக் கின்மையின் அதனைப் பெயர்த்திடுக வெனவும், அத்துவித பாவனை பாவனுதீதமான அச் சிவசொரூபத்தை எளிதில் நேரே யடைவித்தலின் அதனையே பழகெனவுங் கூறினுர்.

"Siva is other than me, I am other than Siva" –
Uproot this attitude of differentiation.
"I indeed am that Siva" —
This conviction that is non-dual, ever practise. (13)

अद्वैत भावना युक्तः
सर्वत्रात्मनि संस्थितः॥
सर्वगं सर्वदेहस्थम्
पश्यत्येवन्नत्र संशयः॥३४॥

अद्वैत भावनायुक्तः सर्वत्र आत्मनि संस्थितः ।
सर्वगं सर्वदेहस्थं पश्यति अत्र न संशयः ॥

Advaita bhāvanāyuktaḥ sarvatrātmani samsthitaḥ
sarvagam sarvadehastham paśyatyatra na samśayaḥ

அத்துவித பாவனையே யார்ந்தோனு யெவ்விடத்து நித்தமு மான்மாவி னிற்குமவ – னத்தனையே யெல்லாவற் றுந்தனுக்கள் யாவினுள் ளுங்காண்ப னில்லைசந் தேக மிதில்.

அத்துவித பாவனையே ஆர்ந்தோனுய் எவ்விடத்தும் நித்தமும் ஆன்மாவில் நிற்கும் அவன் அத்தனையே எல்லாவற்றும் தனுக்கள் யாவின் உள்ளும் காண்பன் இல்லை சந்தேகம் இதில்.

பொழிப்புரை: அத்துவித பாவனையே பொருந்திய வனுய் எங்கும் என்றும் ஆன்மாவின் கண்ணே நிலைத்திருப்பவன்

எல்லா உருவங்களிலும் எல்லா வுடலங்களிலும் அந்தச் சிவனேயே தரிசிப்பன். இதில் ஐயமில்லை.

விசேடவுரை :

''எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு''

என்னூர் நாயனாரும். பல்வேறு தன்மையவாய தனுகரண புவன போகங்கள் யாவற்றுள்ளும் ஒரு படித்தாகப் பரமான்ம சொரூபத்தையே காண்டற்குபாயம் அத்துவித பாவனையே யார்ந்தோனாய் எவ்விடத்து நித்தமு மான்மாவி னிற்குமவன் எனக் காண்பானுக் கடைமொழியாக்கி உடம்பொடு புணர்த்துக் கூறப்பட்டது. பாசபந்தமான உலகைப் பரங்கருணைக் கடலான இறைவன் ஏன் படைக்க வேண்டும் என்னும் வினாவுக்கு விடையாக, உலகு பாசபந்தமன்று; அத்தகைய விபரீதக் காட்சியே பாசபந்தமாவது. ஆதலின், அந்தர்முகப்பட்டு நானா ரெனத் தன் சொரூபத்தை விசாரிக்கு மாற்றால் இயல்பான சொரூபாகாரமாகக் காட்சியை முதலில் மாற்றி, என்றும் சொரூபாகாரமாகவே யுள்ள உலகைப் பின்னர் காணட்டும் என உலகினுண்மை மறைமுகத்தா லுணர்த்துவது இத் திருவெண்பா. காண்பான் நிழலே காட்சியாதலின், தேகான்ம புத்தியாற் சடவுடலில் நிற்பவனுக்கு அவன் காணும் உடலுலகங்கள் யாவும் அவ்வாறே பூதபௌதிகங் களாகக்காணு மாறு போல, அத்துவித பாவனையால் ஆன்ம சொரூபத்தில் நிற்பவனுக்கும் அவை யாவும் பரமான்ம சொரூபமாகவே தோன்றும் என்பதாம்.

''உருவந்தா னயி னுலகுபர மற்ரு
முருவந் தானன்றே லுவற்றி – னுருவத்தைக்
கண்ணுறுதல் யாவனெவன் கண்ணலாற் காட்சியுண்டோ
கண்ணதுதா னந்தமிலாக் கண்''

என்னும் உள்ளது நாற்பது ஈண்டைக் குய்த்துணரத் தக்கதாம்.

Full of this non-dual conviction,
He who, everywhere, abides ever in the Self,
Shall see, in all things, in all bodies,
Only that Siva-self —
of this, there is no doubt. (14)

एव मेकात्म भावेन
संस्थितस्यतु योगिनः
सर्वज्ञत्वं प्रवर्तेत
विकल्प रहितस्यच॥१९॥

एवं एकात्म भावेन संस्थितस्य तु योगिनः ।
सर्वज्ञत्वं प्रवर्तेत विकल्प रहितस्य च ॥

evamekātma bhāvena samsthitasya tu yoginaḥ
sarvajñatvam pravarteta vikalpa rahitasya cha

ஏகமா மிவ்வான்ம பாவனையோ டென்றுமுளான்
மோக விகற்ப முனிந்தோனும் – யோகிக்குச்
செவ்வேயெல் லாமுணர்தல் செப்பப்பட் டுள்ளதா
மவ்வேதந் தன்னி லறி.

ஏகமாம் இவ்வான்ம பாவனையோடு என்றும் உளான்
மோக விகற்பம் முனிந்தோனும் யோகிக்குச்
செவ்வே எல்லாம் உணர்தல் செப்பப்பட்டு உள்ளதாம்
அவ்வேதம் தன்னில் அறி.

பொழிப்புரை: என்றும் இவ்வத்துவித ஆன்ம பாவனை யோடுள்ளவனும் மயக்கத்தாலெழுந்த துவித புத்தியைத் துறந் தவனுமாகிய யோகிக்கு அவ் வேதத்தில் முற்றுமுணர்தல் நன்கு கூறப்பட்டுள்ளதாம்.

விசேடவுரை : எல்லாம் ஆன்ம சொரூபமே யாத லாலும், அதனைத் தவிர்த்து அயலொன்று மின்மையாலும், அவ்வான்ம பாவனையோடென்று முள்ளவன் எவற்றை யறியவேண்டி மனத்தைச் செலுத்தினும் அவற்றை யெல்லா முணர்தல் எளிதென்பதாம். எனினும் எல்லாம் என்பதொன்று மாயைக் கண்ணன்றி உண்மையி லின்மை யானும், அம் மோகவிகற்ப முனிந்த பரமான்மயோகி தனக்கயலொன்றும் காணுமை யானும், விடயங்கள் புலப் படுங்காலும் அவற்றைப் பொருளா யெண்ணி அவன் அவற்றின் வழித் தன் மனத்தைச் செலுத்தான் என்க.

Whoever has this conviction always,
of the one Self,
Shall rid himself of delusion,
and dual perception,
That yogi will attain to omniscience –
So it is said in the Vedas – this you should know. (15)

यो सौ सर्वेषु शास्त्रेषु
पठ्यते ह्यज ईश्वरः ॥
अकायो निर्गुणो ह्यात्मा
सोऽहमस्मि न संशयः ॥ १६ ॥

यः असौ सर्वेषु शास्त्रेषु पठ्यते हि अज ईश्वरः ।
अकायः निर्गुणः हि आत्मा सः अहं अस्मि न संशयः ॥

Yo'sau sarveshu śāstreshu paṭyatehyaja īswaraḥ
akāyo nirgunohyātma so'hamasmi na samśayaḥ

சாத்திரங்கள் யாவற்றுஞ் சன்மமில னீசனென
வேத்திடப் பட்டா னெவனேவக் – காத்திரமில்
லான்குணமில் லானன்மா வாமவனே யாவேனே
யான்சிறிது மைய மிலை.

சாத்திரங்கள் யாவற்றும் சன்மம் இலன் ஈசன் என
ஏத்திடப்பட்டான் எவனே அக்காத்திரமில்லான்
குணமில்லான் ஆன்மாவாம் அவனே ஆவேனே
யான் சிறிதும் ஐயம் இலை.

பொழிப்புரை: *ஜன்மமிலன் எனவும் ஈசன் எனவும் உடலிலன் எனவும் குணமிலன் எனவும் எல்லா மறைகளிலும் எவ்வான்மா துதிக்கப்பட்டானே, அவன் நானே யாவன்; ஐயமில்லை.*

He who is praised in all scriptures,
As the unborn, the Isvara,
That formless and attributeless Self,
He indeed am I, there is no doubt of this. (16)

अविज्ञातः पशु स्सो हि
सृष्टि धर्मं समाश्रितः॥
विज्ञातः शाश्वतः शुद्धः
स शिवो नात्र संशयः॥ १७॥

अविज्ञातः पशुः सःहि सृष्टिधर्मं समाश्रितः ।
विज्ञातः शाश्वतः शुद्धः स शिवः न अत्र संशयः ॥

Avijñātaḥ paśuḥ sohi srshtidharmam samāsritaḥ
vijñātaḥ śāśvataḥ śuddhaḥ sa śivo nātra samśayaḥ

தன்மெய் யறியா தவனே சிருட்டிமுதற்
றன்ம முறுபசு தானுவன் – றன்மெய்
யெவனறிவ னென்று மிருப்பான் விசுத்தன்
சிவனவனே யையமிலை தேர்.

தன் மெய் அறியாதவனே சிருஷ்டி முதல்
தன்மம் உறு பசு தான் ஆவன் தன்மெய்
எவன் அறிவன் என்றும் இருப்பான் விசுத்தன்
சிவன் அவனே ஐயமிலை தேர்.

பொழிப்புரை : தன்னுண்மை யறியாதவனே படைப்பு முதலிய தொழில்களுக்குட்பட்ட பசு (ஜீவன்) ஆவன். தன்னுண்மை யெவனறிவனே அவனென்றுமழியான். விசுத்தன்; அவனே சிவன்; இதில் ஐயமில்லை.

விசேடவுரை: சிருட்டிமுதற்றன்மம் பிறத்தலுயிர்த்தலிறத்தல் மயங்கல் தெளிதல் என்பன. பாசத்தாற் கட்டுண்டோன் பசு. பாசம் அநித்த ஜடதுக்கமாக ஆன்மாவை மருட்டும் அசுத்தமாயை; அஃதற்றவன் விசுத்தன். சிவன் மங்கலமயன். மதயானை குப்பையை வாரித் தானே தன்றலையிற் போட்டுக்கொள்ளுமாறு போலத் தன் மெய்யறியாதவன் தனதல்லாத உடலுயிர்த் தன்மங்களைத் தன்மேலேற்றி மலின முற்றுச் சம்சாரத்துக்குள்ளா யழிதலின் அவன் சிருட்டிமுதற் றன்மமுறு பசுதானுவன் எனவும், தன் மெய் யறிந்தவன் தன்னிற் ருனமைந்து தன்னியல்பான

உண்மை யறிவின்பமா யொளிர்தலின் என்றுமிருப்பான் விசுத்தன் சிவனவனே எனவும் கூறினர். அஞ்ஞான ஞானங்களே பந்த மோக்ஷங்க ளென்பதாம்.

Only he who does not know his true nature
Is the jiva that is subject to the dharmas (characteristics)
of birth, death and so on.
He who knows his true Self
is one who is eternal,
He is the pure, He is Siva,
no doubt of this — know this. (17)

तस्मादात्मा सदा वेद्यः
सुविचार्य विचक्षणैः॥
परापर विभागेन
स्थूल सूक्ष्म विभागशः॥१८॥

तस्मात् आत्मा सदा वेद्यः सुविचार्य विचक्षणैः ।
पर अपर विभागेन स्थूल सूक्ष्म विभागशः ॥

Tasmādātmā sadā vedyah suvicharya vichakshanaiḥ
parāpara vibhagena sthūla sūkshma vibhagaśaḥ

அதனல் விவேகிக ளானேர்நன் காய்ந்து
நிதமறியத் தக்கதான் மாநே – ரதுவே
பரவபர பேதம் பருமையணு பேத
மிருவிதமு மாயிலகு மே.

அதனல் விவேகிகள் ஆனேர் நன்கு ஆய்ந்து
நிதம் அறியத்தக்கது ஆன்மா நேர் அதுவே
பர அபர பேதம் பருமை அணு பேதம்
இருவிதமுமாய் இலகுமே.

பொழிப்புரை : அதனல் விவேகிகள் நன்முயாராய்ந்து இடைவிடாதறியத்தக்கது ஆன்மாவே. பர-அபர எனும் பேதத்தால் அதுவே பருமை - அணு (ஸ்தூல-சூக்ஷ்ம) பேதம் என்னும் இருவிதமுமாக எதிரில் விளங்கும்.

விசேடவுரை: நேரறியத் தக்கதெனக் கூட்டி அபரோக்ஷமா யறியத் தக்கதெனலுமாம்.

சொரூபம் தன்னியல்பில் அணுவளவு பேதமுந் தோன்றப் பெருதாகவும் அந்நிலையிற் பிறழ்ந்த பிரமாதத்தால் அநேகவிதங் கண்டறிவு கலங்கும் பேதமதியாளர்க் கபேதமறிவுறுத்த வேண்டு தலால் அவ்விவிதங்களெல்லாம் உண்மையில் ஆன்ம சொரூப மான ஈசனுடைபின்ன சத்தியான மனத்தையன்றி யின்மையின், அம் மனத்தோ டான்மா வுக்குள்ள இயைபுபற்றி, அப்பரவபரபேதமே பருமை யணுபேத முமா யிலகும் என உபசார வகையா லிவ்வாறு கூறப்பட்டது.

Hence, what men of discrimination
should enquire carefully
And directly realise is the Self;
That itself shines twofold,
As the transcendental and the inferior divisions,
the gross and the subtle. (18)

परः परम निर्वा ण।
स्व अपरः सृष्टि भेदतः॥
स्थूलो मन्त्र मयः प्रोक्तः
सूक्ष्मो ध्यानैक संस्थितः॥३१॥

परः परमनिर्वाणः तु अपरः सृष्टिभेदतः ।
स्थूलः मन्त्रमयः प्रोक्तः सूक्ष्मः ध्यान एक संस्थितः ॥

Paraḥ parama nirvāṇas tvaparaḥ sṛshtibhedataḥ
sthūlo mantra mayaḥ proktaḥ sūkshmo dhyānaika samsthitaḥ

பரமநிர் வாணம் பரமா மபரஞ்
சிருட்டி வகையாற் றிகழும் – பருமையா
மந்திரரூ பம்பகர்வர் சூக்கும மாருத
சிந்தையி னின்றதாத் தேர்.

பரம நிர்வாணம் பரமாம் அபரம்
சிருட்டி வகையாற் திகழும் பருமையா
மந்திர ரூபம் பகர்வர் சூக்கும மாருத
சிந்தையில் நின்றதாய் தேர்.

பொழிப்புரை: பரம் என்பது பரம நிர்வாணத்தையும், அபரம் படைப்பு வகையையும் குறிக்கும். தூலம் மந்திர வடிவாக அறிந்தோர் கூறுவர். சூக்ஷ்மம் இடைவிடாத் தியானத்தில் நிலை பெற்றதாக அறி.

The Supreme nirvana is the higher,
The inferior is manifest as the creation,
Mantras are spoken of as its gross form,
What abides in changeless awareness
is the subtle. (19)

अथवा बहुशोनेन
किमुक्तेन षडानन ॥
वाग्विकल्प विशेषेण
मन स्संमोह कारिणा ॥ २०॥

अथवा बहुशः अनेन किं उक्तेन षडानन ।
वाक् विकल्प विशेषेण मनः संमोहकारिणा ॥

Athavā bahuśo'nena kimuktena shadānana
vagvikalpa visheshena manas sammohakariṇā

அஃதின்றி யாறு முகனே யனந்தவித
மெஃதுரைத்து மென்ன வியம்புதி – யஃது
வியக்கத் தகுஞ்சொல் விசித்திரமே புத்தி
மயக்கத்திற் கேது மதி.

அஃது இன்றி ஆறுமுகனே அனந்த விதம்
எஃது உரைத்தும் என்ன இயம்புதி அஃது
வியக்கத் தகும் சொல் விசித்திரமே புத்தி
மயக்கத்திற்கு ஏது மதி.

பொழிப்புரை : ஆறுமுகனே, அதுவல்லது பல படியாக யாதுரைத்துந்தான் அதனுற் பயனென்ன சொல். அது முற்றும் வியக்கத்தகுஞ் சொல் விசித்திரமும் மதிமயக்கத்துக்குக் காரணமுமேயாம்.

Shanmukha! without realising It (Atma),
What avails explanations there of
in endless ways, tell me!
All these are only wonderful display of words,
The cause for the delusion of the mind. (20)

सन्त्या
[illegible] धर्माःत्मन स्सर्वे
यदेव परिकल्पयेत्॥
तत्तद्भवत्य संदेहात्
सदा तद्भाव भावतः॥ ३१॥

धर्माः सन्ति आत्मनः सर्वे यत् एव परिकल्पयेत् ।
तत् तत् भवति असंदेहात् सदा तद्भाव भावतः ॥

Dharmāḥ santyātmanas sarve yadeva parikalpayet
tattatbhavatyasandehāt sadā tadbhāva bhāvataḥ

தருமங்கள் யாவுமான் மாவின்கட் டங்கு
நிருமிப்பன் யாது நினைப்பா – லொருமையா
யுன்னியுன்னி யென்றுமதை யுற்றிடுவ னஂ்ததனை
யென்னுமிதி லைய மிலை.

தருமங்கள் யாவும் ஆன்மாவின் கண் தங்கும்
நிருமிப்பன் யாது நினைப்பால் ஒருமையாய்
உன்னி உன்னி என்றும் அதை உற்றிடுவன் அஂ்து அதனை
என்னும் இதில் ஐயம் இலை.

பொழிப்புரை: தருமங்கள் (தன்மைகள், குணங்கள்) யாவும் ஆன்மாவினிடத்துள்ளன. எதனையெதனை நினைப்பு மாத்திரத்தால் கற்பிப்பனே அதனையதனை ஒருமனப்பாட்டா

லிடைவிடா தெண்ணி யெண்ணி (அவ்வாற்றுல் முடிவில்) அதனேயதனே யடைவன். இதில் ஐயமில்லே.

All the dharmas (qualities) abide in the Self.
Whichever of them the jiva imagines,
Whereby he concentrates his thoughts
again and again on it,
He will attain that object —
there is no doubt of this. (21)

इत्येव मात्म विज्ञानम्
कथितंतु समासतः॥
ज्ञात्वैव मात्म मयं सर्वं
आत्मानं पर्युपासते ॥२१॥

इति एवं आत्मविज्ञानं कथितं तु समासतः ।
ज्ञात्वा एव आत्ममयं सर्वं आत्मानं पर्युपासते ॥

Ityeva mātmavijñānam kathitam tu samāsataḥ
jñatvaivātmamayam sarvam ātmānam paryupāsate

இப்படி யான்மவிஞ் ஞானமென் றென்ஞலே
செப்பிடப் பட்டது சேர்த்துருட்டி – யெப்படியு
மெல்லாமு மான்மமய மென்ரூர்ந்தே யான்மசிந்தை
வல்லாஞ யென்றுமே வாழ்.

இப்படி ஆன்ம விஞ்ஞானம் என்று என்ஞலே
செப்பிடப்பட்டது சேர்த்து உருட்டி எப்படியும்
எல்லாமும் ஆன்மமயம் என்று ஓர்ந்தே ஆன்ம சிந்தை
வல்லாஞய் என்றுமே வாழ்.

பொழிப்புரை: ஆன்மவிஞ்ஞானம் இப்படிப்பட்ட தென்று என்ஞலே (வெண்ணெய் போலச்) சேர்த்துருட்டிச் (சுருக்கிச்) சொல்லப்பட்டது. எல்லாப்படியாலும், எல்லாம் ஆன்மமயம் என்றறிந்து ஆன்மத் தியானத்தில் உறுதி யுடையோஞய் நீ என்றுமே வாழ்.

Thus has been told by me
as the knowledge of the self
What has been gathered succinctly
in a condensed form.
All, by any means, is of the nature of the Self,
Realising this, may you ever be strengthened
in the thoughts of the Self. (22)

न तत्र देवा वेदा वा
यज्ञा वा बहु दक्षिणा ।
आश्रयेदात्म विज्ञानं विमलं सर्वतो मुखम् ॥२३॥

न तत्र देवा वेदा वा यज्ञा वा बहुदक्षिणाः ।
आश्रयेत् आत्मविज्ञानं विमलं सर्वतोमुखम् ॥

na tatra devā vedāvā yajñāvā bahudakshiṇā
āśrayedātma vijñānam vimalam sarvatomukham

தெய்வமோ வேதமோ தீயிற்செய் வேள்வியோ
செய்வகையிற் சேர்பலவாந் தட்சிணையோ –
[வெவ்வகையு
மங்கில்லை நின்மலமா யெங்குமுக மார்ந்ததாய்த்
தங்கான்ம விஞ்ஞானஞ் சார்.

தெய்வமோ வேதமோ தீயிற் செய் வேள்வியோ
செய்வகையில் சேர் பலவாம் தக்ஷிணையோ எவ்வகையும்
அங்கு இல்லை நிர்மலமாய் எங்குமுகம் ஆர்ந்ததாய்
தங்கு ஆன்ம விஞ்ஞானம் சார்.

பொழிப்புரை : *தெய்வமும், வேதமும், தீயிற்செய்யும் யாகமும், அதனைச் செய்முறையிற் பொருந்தும் பலவாகிய தட்சிணையும் இவையாவும் ஆங்கில்லை. (அதனால் அவற்றிற் பொருந்திய மதி மயக்கத்தை மாற்றி) நின்மலமும் எங்கு முகமுள்ளதுமான அவ்வான்ம விஞ்ஞானத்தை யடை.*

The deities, the Vedas, the fire sacrifices,
The various gifts to priests
in the course of their performance,
None of this exists there
(in the nature of the Self) —
Be tuned to the blemishless, omni-faceted,
steadfast knowledge of the Self. (23)

संसार अर्णव मग्नानाम्
भूतानां शरण अर्थिनाम् ।
न अन्यः शरणदः कश्चित्
आत्मज्ञानात् ऋते क्वचित् ॥२४॥

संसार अर्णव मग्नानां भूतानां शरण अर्थिनाम् ।
न अन्यः शरणदः कश्चित् आत्मज्ञानात् ऋते क्वचित् ॥

Samsārārṇava magnānām bhutānām śaraṇārthinām
nānyaḥ śaraṇadaḥ kaschit ātmajñānadṛte kvachit

மரணபவ சம்சார மாக்கடன் மூழ்கிச்
சரணநா டிச்சா ருயிர்க்குச் – சரண
மருள்வதவ் வான்மவிஞ் ஞானத்தை யன்றி
யொருபொருள்வே றின்றெனவே யோர்.

மரண பவ சம்சார மாக்கடல் மூழ்கிச்
சரணம் நாடிச் சார் உயிர்க்குச் சரணம்
அருள்வது அவ்வான்ம விஞ்ஞானத்தை அன்றி
ஒரு பொருள் வேறு இன்று எனவே ஓர்.

பொழிப்புரை : *பிறப்பிறப்பு வடிவான சமுசாரப் பெருங் கடலில் மூழ்கி (அதினின்று கரையேற) புகலிடந் தேடி யடையும் உயிர்த்தொகைக்கு புகலிடமுதவுவது அவ்வான்ம விஞ்ஞானத்தைத் தவிர வேறொரு பொருள் இல்லை.*

விசேடவுரை: *அஞ்ஞானமென்னும் அநான்ம ஞானத்தின் காரியமான மரணபவ சம்சாரம் அதற்குப் பகையாகிய ஆன்ம*

ஞானத்தாலன்றி யழியாதென்பதாம். (அநான்ம ஞானம் = நானுவாய்த் தோற்றும் அயலறிவு).

To the jiva drowning in the vast ocean
of birth-death cycle,
And seeking a refuge,
What affords refuge is only that knowledge of the Self,
Not anything else — know this. (24)

आत्मानं परमो भूत्वा
यो विजानाति तत्वतः।
स मुच्यते त्वयत्नेन
सर्वावस्थां गतोपिसन्॥२९॥

आत्मानं परमः भूत्वा यः विजानाति तत्त्वतः ।
स मुच्यते तु अयत्नेन सर्व अवस्थां गतः अपि सन् ॥

Ātmānam paramo bhūtva yo vijānāti tatvataḥ
samucchyatetvayatnena sarvāvasthām gato' pisan

பரமாகி யப்பர மான்மாவை யாவ
னுரமாக வுள்ளபடி யோர்வ – னொருமுயல்வு
மின்றியவன் வீடுறுவ னெல்லா வவத்தைகளு
மொன்றிடுவ னேனு முணர்.

பரமாகி அப்பரமான்மாவை யாவன்
உரமாக உள்ளபடி ஓர்வன் ஒரு முயல்வும்
இன்றி அவன் வீடுறுவன் எல்லா அவத்தைகளும்
ஒன்றிடுவனேனும் உணர்.

பொழிப்புரை: பரமான்மாவாகிய தன்னை (அவ்வாறே) பரமாக, எவன் உறுதியா யுள்ளபடி யுணர்வனே, அவன் எல்லாவவத்தைகளிலும் பொருந்துவானேனும் ஒரு முயற்சியு மின்றியே (அச்சமுசாரபந்தத்தினின்று) விடுதலை யடைவன்.

விசேடவுரை : கற்பனையான உலக நோக்குற்றவர்க்குப் பரமநிருவாணம் துரீயம் (நான்காமவத்தை) ஆயினும்

உண்மையான பரமான்ம ஞானம் உரமாயுற்றவனுக்கு அது ஏனையவவத்தைக ளெல்லாவற்றினும் ஒக்கக் கலந்த இரண் டற்ற அதீதமாதலின் பிறவவத்தைகளைப் பிறர்போலத் தானுங் காண்போனுகக் காணப்படினும், அவன் உண்மையில் அவ்வெல்லாவற்றினும் தன்சொரூபமான அவ்வதீதத்தையே காண்டலின் எல்லாவவத்தைகளு மொன்றிடு வனேனும் ஒரு முயல்வுமின்றி யவன் வீடுறுவன் எனக் கூறினர்.

''ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய வடைத்து.''

என உத்தர வேதமோதல் காண்க.

He who becomes of the nature of the Supreme,
And realises it as it really is,
Shall, though experiencing all changing states,
Attains liberation without effort – be aware of this. (25)

आत्मलाभात् परो लाभः
क्वचिदन्यो न विद्यते ॥
तदात्मान मुपासीत
योऽयमात्मा परस्तु सः॥ २५॥

आत्मलाभात् परः लाभः क्वचित् अन्यः न विद्यते ।
तत् आत्मानं उपासीत यः अयं आत्मा परः तु सः ॥

Ātmalābhāt paro lābhaḥ kvachidanyo na vidyate
tadātmāna mupāsīta yo' yamātma parastu saḥ

ஆன்மலா பத்தினு மன்னிய மாம்பேறு
தான்மற்றொன் றெங்குமே தானில்லை - யான்மாவை
யென்றுமுபா சித்திடுக விவ்வான்மா யாவனவ
னென்றுபர மான்மாவா மோர்.

ஆன்ம லாபத்தினும் அன்னியமாம் பேறு
தான் மற்றொன்று எங்குமே தான் இல்லை ஆன்மாவை
என்றும் உபாசித்திடுக இவ்வான்மா யாவன் அவன்
ஒன்று பரமான்மாவாம் ஓர்.

பொழிப்புரை: ஆன்மலாபத்தினும் அன்னியமான லாபம் எங்கும் (தேடினும்) பிறிதொன்றில்லை. (அதனால் அறிஞன்) அவ்வான்மாவையே என்றுமுபாசிக்கக் கடவன். எவன் இவ்வான்மாவோ அவன் இரண்டறப் (பொருந்திய) பரமான்மாவாம்.

விசேடவுரை: எவன் இவ்வான்ம சாக்ஷாத்காரம் பெறுவனே அவன் அத்துவிதீயமான பரமான்மாவாம் என்றபடி.

There is no greater blessing anywhere,
Apart from the gaining of the Self,
Meditate ever on the Self. He, who is the Self,
He indeed is the one all-pervasive Supreme Self —
be aware of this. (26)

न प्राणो नैव चापानो
विशिष्ट करणस्तथा ॥
सर्वज्ञन्तु तमात्मानम्
परिपूर्णं सदा स्मरेत् ।२७॥

न प्राणः न एव च अपानः विशिष्ट करणः तथा ।
सर्वज्ञं तु तं आत्मानं परिपूर्णं सदा स्मरेत् ॥

Na prāṇo naivachāpano viśishta karaṇastathā
sarvajñam tu tamātmānam paripūrṇam sadā smaret

அல்ல பிராண னபானனுமே யன்றவ்வா
றல்ல வவற்றின்மே லாங்கரண – மெல்லா
முணர்வதுவா யுள்ளபரி பூரணமா மான்ம
வெணநிதமு மெய்துவா யே.

அல்ல பிராணன் அபானனுமே அன்று அவ்வாறு
அல்ல அவற்றின் மேலாம் கரணம் எல்லாம்
உணர்வதுவாய் உள்ள பரிபூரணமாம் ஆன்ம
எணம் நிதமும் எய்துவாயே.

பொழிப்புரை: பிராணனும் அபானனும் அவ்வாறே அவற்றின் மேலாம் அந்தக்கரணமும் (ஆன்மா) அல்ல. (ஆதலால்) எல்லா முணர்வதுவும் ஒன்றுயுள்ள முழுமுதலும் ஆகிய அவ்வான்மத் தியானமே இடைவிடா தெய்துவாய்.

It is not the prana (the vital air that circulates)
nor the apana (the air that travels down) even,
Nor the instruments superior even to these,
the senses, mind and such.
Reach ever for the thought of the Self
That is the omniscient, and the perfect. (27)

नचैवाभ्यंतरे बाह्ये
नातिदूरे समीपतः॥
सुनिष्कले परे स्थाने
तत्र चित्तं निवेशयेत् ॥३८॥

न च एव अभ्यन्तरे बाह्ये न अतिदूरे समीपतः ।
सु निष्कले परे स्थाने तत्र चित्तं निवेशयेत् ॥

Na chaivābhyantare bāhye nātidūre samīpataḥ
sunishkale pare sthāne tatra chittam niveśayet

அகத்தும் புறத்திலு மேயில்லை யஃது
மிகத்தூரத் தண்மையிலு மேவா – தகளமா
மந்தப் பரந்தாம மார்ந்தொளிரு மாங்கேநீ
சிந்தையை யென்றுஞ் செலுத்து.

அகத்திலும் புறத்திலுமே இல்லை அஃது
மிகத் தூரத்து அண்மையிலும் மேவாது அகளமாம்
அந்தப் பரந்தாமம் ஆர்ந்து ஒளிரும் ஆங்கே நீ
சிந்தையை என்றும் செலுத்து.

பொழிப்புரை: நிஷ்களமாகிய அந்தப் பரந்தாமம் உள்வெளி யிரண்டிடத்தும் இல்லை; அன்றித் தூரசமீபத்துங் கூடச் சற்றும் இல்லை. மற்றெங்கே அது நிறைந்து விளங்குமோ அங்கே உன் தியானத்தை நீ என்றும் செலுத்து.

விசேடவுரை: மனக் கற்பனையான அகம்புறம், தூர சமீபம் முதலிய தேசபேதங்கள் அம்மனுதீதமான பரந்தாமத் திலவா மாதலின், அகத்தும் புறத்திலுமேயில்லை, அஃது மிகத்தூரத் தண்மையிலு மேவாதெனவும், அந்தத் தாமம் அகளமாதலின் ஆர்ந்தொளிரு மெனவும், அந்தத் தாமமாகிய தன்னை விட்ட விடத்துக் கேவல மனை பாவனையாற் கற்பிதமாகக் காணப் படும் ஆதாரங்கள் போலன்றி, அவ்வாதாரங்கட் கெல்லாம் பேராதார மாகிய தன்னைப்பற்றி அந்தர்முகப்பட்ட அறிவால் நானெனச் செய்யும் ஆன்மவிசாரத்தால் அபரோக்ஷமா யறியப் படுதலின், இதயத்தைப் பெயர் சுட்டலின்றி ஆங்கே யெனவும், சிந்தையை அதன் பிறப்பிடமான அவ்விதயத்திற் சேர்த்தலே பலதிறப்பட்ட முயற்சிகளாலும் ஒருவன் அடையத்தகுந்த சிறந்த பரமாத்மத் தியானமாதலின், சிந்தையைச் செலுத்தெனவும், பிரமாதமே மரணமாதலின் அதற்குச்சற்று மவகாசங் கொடாதே யென்பார் என்றுஞ் செலுத்தெனவுங் கூறினர்.

It is neither inside nor outside,
Not afar, nor nearby, nor does it fit in any place.
That Supreme is formless, all pervasive and effulgent,
Direct your thoughts ever to it. (28)

तिर्यगूर्ध्वं मध्यश्चैव
बहिरंतश्च नित्यशः॥
सर्वं शून्यं तमाभासम्
आत्मानं भावयेत्सदा ॥ ३१॥

तिर्यक् ऊर्ध्वं अधः च एव बहिः अन्तः च नित्यशः ।
सर्वं शून्यं तम् आभासं आत्मानं भावयेत् सदा ॥

Tiryagūrdhva madhaschaiva bahirantascha nityaśaḥ
sarvaśūnyam tamābhāsam ātmānam bhāvayet sadā

குறுக்கொடுமேல் கீழிலுமே கூறுபடு முள்ளும்
புறத்திலு மெங்குமெப் போது – முறப்பெறுஞ்
சூனியமாய்த் தானே சொலிக்குமான் மாவையே
மேனிதமும் பாவனைசெய் மேல்.

குறுக்கொடு மேல் கீழிலுமே கூறுபடும் உள்ளும்
புறத்திலும் எங்கும் எப்போதும் உறப்பெறும்
சூனியமாய்த் தானே சொலிக்கும் ஆன்மாவையே
மேல் நிதமும் பாவனை செய் மேல்.

பொழிப்புரை: குறுக்கும் (நெடுக்கும்) மேலுங் கீழும் இருவகையாய்ச் சொல்லப்படும் உள்ளும் வெளியும் ஆகிய எங்கும் எப்போதும் உளதாகும் சூனியமும் தானே விளங்குவதும் ஆகிய அவ்வான்மாவையே நீ இனி யென்றும் தியானம் செய். அதுவே சிறப்பாம்.

விசேடவுரை: பொறிகளுக்குப் புலனுகாமையிற் சூனியமாய் என்றும், சூனியம் என்றது கொண்டு அஸத்தென்று கருதற்க ஸத்தே யென்பார், சித்தாதலிற் றானே விளங்கும் என்றும் கூறினர்.

It is across, above and below,
Inside and outside, which are divisions,
established firmly everywhere ever,
The void, the self-luminous Self —
Meditate on that more and more ever. (29)

नैव शून्यं नचाऽशून्यम्
अशून्यं शून्य मेवच॥
पक्ष पात विनिर्मुक्त
मात्मानं पर्यु पासयेत् ॥३०॥

न एव शून्यं न च अशून्यं अशून्यं शून्यं एव च।
पक्षपात विनिर्मुक्तं आत्मानं परि उपासयेत् ॥

Naiva śūnyam nachā'śūnyam aśūnyam śūnyamevacha pakshapāta vinir muktamātmānam paryupasayet

சூனியமு மல்ல வசூனியமு மல்லதாஞ்
சூனிய மல்லதுமாஞ் சூனியமாந் – தானெங்கும்
பக்கபா தஞ்சற்றும் பற்றுத வான்மாவை
யெக்காலுஞ் சிந்தை யியற்று.

சூனியமும் அல்ல அசூனியமும் அல்லதாம்
சூனியம் அல்லதுமாம் சூனியமாம் தான் எங்கும்
பக்கபாதம் சற்றும் பற்றுத ஆன்மாவை
எக்காலும் சிந்தை இயற்று.

பொழிப்புரை: ஒருங்கே சூனியமுமன்றுய் அசூனியமு மன்றுய், சூனியமுமாய் அசூனியமுமாய் (இவ்வாறு விசித்திர மாய்த்) தானெங்கும் (பொருந்தலாற்) ஓரம்போக்குச் சற்றும் பொருந்தாத அவ்வான்மாவை இடைவிடாது தியானஞ் செய்.

விசேடவுரை: பரமான்ம சொரூபம் சிந்தையு மொழியுஞ் செல்லா நிலைமைத்தாகலின் சூனியமுமல்ல வசூனியமு மல்லதா மெனவும், எனினும் அச் சூனியாசூனியங்கள் அதனலன்றி விளங்கலின்மையின் சூனியமல்லதுமாஞ் சூனியமா மெனவும், பரிச்சின்னகங் காரமற்ற பரிபூரண சொரூபத்துக்குப் பக்ஷபாதஞ் சற்றுங் கூடாமையின் தானெங்கும் பக்ஷபாதஞ் சற்றும் பற்றுத வான்மாவை எனவுங் கூறினர்.

Not a void, not a non-void,
It is also the non-void, and the void,
Pervasive everywhere, but without predilections —
Think of this Self-ever. (30)

निरामयं निराधारम्
वर्ण रूप विवर्जितम्॥
निरंजनं गुणातीतम्
आत्मानं पर्युपासयेत्॥३९॥

निरामयं निराधारं वर्ण रूप विवर्जितम् ।
निरञ्जनं गुणातीतं आत्मानं परि उपासयेत् ॥

Nirāmayam nirādhāram varṇa rūpa vivarjitam
niranjanam guṇātītam ātmānam paryupāsayet

ஆமயமோ டாதார மற்றதாய் வர்ணமொடு
நாமரூ பங்களு நண்ணிடா – தாமந்
நிரஞ்சன நிர்க்குண வான்மாவை நீயு
நிரந்தர மாக நினை.

ஆமயமோடு ஆதாரம் அற்றதாய் வர்ணமொடு
நாம ரூபங்களும் நண்ணிடாதாம் அந்
நிரஞ்சன நிர்க்குண ஆன்மாவை நீயும்
நிரந்தரமாக நினை.

பொழிப்புரை: *நிராமயமும் நிராதாரமுமாய், நிறத்தோடு பெயர் வடிவங்களும் பொருந்தாதாய், நிரஞ்சனமும் நிர்க் குணமுமான அவ்வான்மாவை நீயு மிடைவிடாது தியானஞ் செய்.*

Afflictionless, and without any support for itself,
Bereft of caste, name and form —
That taintless, attributeless Self
You should unceasingly meditate upon. (31)

निराश्रयं निरालम्बम्
अप्रमेय मनौपमम्॥
स्वभाव विमलं नित्यम्
आत्मानं पर्युपासयेत्॥३३॥

निराश्रयं निरालम्बं अप्रमेयं अनौपमम् ।
स्वभाव विमलं नित्यं आत्मानं परि उपासयेत् ॥

Nirāśrayam nirālambam aprameya manaupamam
svabhāva vimalan nityam ātmānam paryupāsayet

ஆசிரய மாலம்ப மற்றதாய் மானத்தாற்
கோசரமா காதுவமை கூறரிதாய் – மாசிலியல்
மன்னியதாய் நித்தியமாய் மன்னிய வான்மாவை
யுன்னிடுக நாளு முவந்து.

ஆசிரயம் ஆலம்பம் அற்றதாய் மானத்தாற்
கோசரமாகாது உவமை கூற அரிதாய் மாசுஇல் இயல்
மன்னியதாய் நித்தியமாய் மன்னிய ஆன்மாவை
உன்னிடுக நாளும் உவந்து.

பொழிப்புரை: நிராசிரய நிராலம்பமாய், அளவைகளாற் பற்றப்படாதாய், கூறத் தகுவதோர் உவமை யற்றதாய், (இயல் பாகவே) மாசற்ற தூய்மை பொருந்தியதாய், நித்தியமாய் நிலைத்த அவ் வான்மாவை நிதமும் மகிழ்ந் தெண்ணுக.

விசேடவுரை: இவ்வாறு திருவெண்பாக்களாலும் ஆன்ம லக்ஷணங்களின்னவை யெனவும், அத்தகைய ஆன்மாநு சந்தானம் ஆற்றொழுக்குப்போல் அவிச்சின்னமா யாற்றக் கடவ னெனவும் கூறப்பட்டன.

With no refuge, with nothing to support it,
Beyond the range of comprehension, without parallel,
Faultless by nature, the eternal, — the
Self that is so, meditate upon it joyfully, for ever. (32)

संन्यस्य सर्वकर्माणि
निस्पृहस्संगवर्जितः।
भावयेदात्मनात्मानम्
आत्मन्येवात्मनि स्थितम् ॥३२॥

सन्यस्य सर्वकर्माणि निःस्पृहः संग वर्जितः ।
भावयेत् आत्मना आत्मानं आत्मनि एव आत्मनि स्थितम् ॥

Sanyasya sarvakarmāṇi nispruhas sangavarjitaḥ
bhāvayedātmanātmānam ātmanyevātmani sthitam

வினைகளெல் லாமுமே விட்டு நிராசை
தனையுற்றுச் சங்கந் தணந்து – பினையென்றுந்
தன்னிலே தன்னுலே தன்னிலமர் தன்னையே
யுன்னிட வேண்டு முணர்.

வினைகள் எல்லாமுமே விட்டு நிராசைதனை
உற்றுச் சங்கம் தணந்து பினை என்றும்
தன்னிலே தன்னுலே தன்னில் அமர் தன்னையே
உன்னிட வேண்டும் உணர்.

பொழிப்புரை: கன்மங்களெல்லாம் துறந்து, நிராசை பொருந்தி, கூட்டத்தினின்று பிரிந்து பின்னர், தன்னுட் பொருந்திய தன்னைத் தன்னிடத்துத் தன்னுலே இடையறத் தியானிக்க வேண்டும்.

Embracing dispassion and thus desisting
from all karmic activity,
Shying away from society,
One should, thereafter, ever meditate upon
The Self within oneself, in oneself, by oneself,
— be aware of this. (33)

सदेश जाति संबंधान्
वर्ण आश्रम समन्वितान्॥
भावा नेतान् परित्यज्य
स्वरूपं भावये द्बुधः॥३४॥

सदेश जाति संबन्धान् वर्ण आश्रम समन्वितान् ।
भावान् एतान् परित्यज्य स्वरूपं भावयेत् बुधः ॥


Sadeśa jāti sambandhān varṇāśrama samanvitān
bhāvānetān parityajya svarūpam bhāvayetbudhaḥ

தேயமொடு சாதி திகழ்வர்ண மாசிரம
மாய விவற்றை யனுசரித்து – மேயபல
சிந்தனைக ளெல்லாஞ் சிதைத்தறிஞன் றன்னுருவின்
சிந்தனையே செய்க தினம்.

தேயமொடு சாதி திகழ் வர்ணம் ஆசிரமம்
ஆய இவற்றை அனுசரித்தும் ஏயபல
சிந்தனைகள் எல்லாம் சிதைத்து அறிஞன் தன் உருவின்
சிந்தனையே செய்க தினம்.

பொழிப்புரை: தோன்றுநின்ற தேச ஜாதி வர்ணு சிரமங்கள் ஆகிய இவற்றைப் பற்றியெழும் பல்வகைப்பட்ட எண்ணங்களையும் முற்றக்கெடுத்து, விவேகி சொரூபத் தியானமே நாளும் செய்க.

Country and lineage,
the traditional castes and style of life,
Effacing various thoughts
arising in the wake of these,
The wise man should meditate daily,
Upon his (real) nature. (34)



मन्त्रः अयं देवताः हि एषात् तु इदं ध्यानं इदं तपः ।
सर्व भावान् परित्यज्य स्वात्म भावं तु भावयेत् ॥

Mantro'yam devatāhyeshātvidam dhyānamidam tapaḥ
sarva bhāvānparityajya svātma bhāvantu bhāvayet

இதுமந் திரமா மிதுதே வதையா
மிதுவே தியான மெனலு – மிதுவே
தவமாகு மெண்ணங்க ளெல்லாந் தணந்து
சுவரூப சிந்தை துணி.

இது மந்திரமாம் இது தேவதையாம்
இதுவே தியானம் எனலும் இதுவே
தவமாகும் எண்ணங்கள் எல்லாம் தணந்து
சுவரூப சிந்தை துணி.

பொழிப்புரை: மற்றெல்லா நினைவுகளினின்றும் நீங்கி, சொரூப நினைவே (தலையாய தென்று) துணிந்து செய். இந் நினைவே மந்திரம், தேவதை, தியானம், தவம் யாவுமாம்.

"This is the mantra", "this is the deity",
"This is indeed what is called meditation",
"This indeed is tapas",
Casting afar all such thoughts,
Concentrate on the nature of your own Self. (35)

अभावो भाव माश्रित्य
भावं कुर्या न्निरा श्रयम्॥
आत्म संस्थं मनःकृत्वा
न किंचिदपि चिंतयेत्॥३६॥

अभावः भावं आश्रित्य भावं कुर्यात् निराश्रयम् ।
आत्मसंस्थं मनः कृत्वा न किंचित् अपि चिन्तयेत् ॥

Abhāvo bhāva māśritya bhāvam kuryānnirāśrayam
ātmasamstham manaḥ kṛtvā na kiñchidapi chintayet

எண்ண மிலஞந்தா னெண்ணமோ டொன்றியதை
யெண்ணற் கிடனிலதாய்ச் செய்திடுக - வெண்ணு
மனதையான் மாவிலே மன்னச்செய் தொன்று
மனதா னினையற்க மற்று.

எண்ணம் இலஞும் தான் எண்ணமோடு ஒன்றியதை
எண்ணற்கு இடன் இலதாய்ச் செய்திடுக எண்ணும்
மனதை ஆன்மாவிலே மன்னச் செய்து ஒன்றும்
மனதால் நினையற்க மற்று.

பொழிப்புரை: *(அறவே) நினைப்பற்றதான் (யாதானு மொரு) நினைப்போடு பொருந்திப் (பின்னர்) அந் நினைப்பையும் நினைப்புக்கு விடயமற்றதாகச் செயக் கடவன். அவ்வாறு நினைக்கும் மனதை ஆன்மாவின் கண்ணே நிலைபெறச்செய்து பின்னர் அம் மனதால் மற்றொன்றையும் சற்றும் நினையா தொழியக்கடவன்.*

விசேடவுரை : *அதை யெண்ணற்கிடனிலதாச் செய்திடுக என்றது அந்தத் தியானத்தை நிராசிரயமாக - ஒன்றையும் விடயமாகப் பற்றாது - செய்க என்பதாம்.*

The Self is without thought,
Make it impossible for the thought-oriented (mind)
to think at all.
Cause the mind that thinks to get settled on the Self,
Let not the mind think of anything else. (36)

नैव चिंत्यं नचाचिंत्यं
अचित्तं चित्त मेवतत् ॥
पक्ष पात विनि र्मुक्त
मात्मानं पर्यु पासचेत् ॥ ३७ ॥

न एव चिन्त्यं न च अचिन्त्यं अचित्तं चित्तं एव तत् ।
पक्षपात विनिर्मुक्तं आत्मानं पर्युपासयेत् ॥

Naiva chintyam na chāchintyam achittam chitta mevatat pakshapāta vinirmukta mātmānam paryupāsayet

சிந்திக்கத் தக்கதல சிந்திக்கொண் ணுதல்ல
சிந்தை யலததுவே சிந்தையுமா – மெந்தவோர்
பக்கமுஞ் சாயாப் பரமான வான்மாவை
யெக்காலுஞ் சிந்தைசெய் யே.

சிந்திக்கத்தக்கது அல்ல சிந்திக்க ஒண்ணுது அல்ல
சிந்தை அல்ல அது அதுவே சிந்தையுமாம் எந்த ஓர்
பக்கமும் சாயாப் பரமான ஆன்மாவை
எக்காலும் சிந்தை செய்யே.

பொழிப்புரை: *தானென்றே, நினைக்கத்தக்கது மன்றுய்த் தகாதது மன்றுய், நினைப்புமாய், அந் நினைப்பல்லாததுமாய், (எங்கும் நிறைந்தமையால்) எந்தப்பக்கமுஞ் சற்றுஞ் சாயாத அப்பரமான்மாவை இடைவிடாது தியானஞ் செய்.*

விசேடவுரை: *பிறசிந்தையால் விடயமாகப் பற்றப் படாமையின் சிந்திக்கத்தக்கதல வெனவும், எனினும் சுவரூப சிந்தையாற் பற்றப்படுதலின் சிந்திக்கொண்ணு தல்ல வெனவும், சிந்தையின்றியுந் தானுளதாதலின் சிந்தை*

யலதெனவும், எனினும் எவ்வகைச் சிந்தையுந் தன்னை யொழிந் துளதாதலின்மையின் சிந்தையுமாமெனவுங் கூறினர். சிந்திக்கத்தக்கதும் தகாததுமாகக் கூறுபடுத்துச் சொல்லல் சிந்தனைக்கு வினைமுதலாய் நின்ற தன்னினும் வேறுய விடயத்துப் பொருந்துதலன்றி அத்தன்னினும் வேறுய் விடயமாக்க வேறொருதானின்றி அனைவரநுபவத்தாலும் ஒன்றேயாகிய ஆன்மாவிடத்துப் பொருந் தாமையின் சிந்திக்கத் தக்கதல்ல சிந்திக்கொண்ணுதல்ல, எனக் கூறினரெனினு மமையும்.

''என்னை யறியேனு னென்னை யறிந்தேனு
னென்ன னகைப்புக் கிடனாகு - மென்னை
தனைவிடய மாக்கவிரு தானுண்டோ வொன்று
யனைவரநு பூதியுண்மை யால்.''

என்னும் உள்ளதுநாற்பதன் பொருள் ஈண்டுய்த்துணரத் தக்கது. அத்தகைய பரமான்மாவைச் சிந்தித்தலாவது பரிச்சின்ன பாவத்தால் யானென்றெழுந்து விருப்பு வெறுப்புற்று யாதானு மொருபக்கஞ் சாய்தல் (சலித்தல்) இன்றி சருவான்ம பாவத் தால் பூரணதிருத்தனைய் நடுநிலை (அசலநிலை) யமைந்து அப் பரமான்ம நிட்டை பயிறல். 30 ஆம் திருவெண்பாவோடு இதனை யொப்பிடுக.

The Self is not something that can be thought of,
nor is it something that cannot be thought of,
It is not thought itself,
It is indeed itself thought, —
What does not lean towards any of the above,
The Supreme that is the Self,
meditate upon it ever. (37)

अचिंत्यं चिंतये न्नित्यं
कृत्वा चित्तं निराश्रयम्॥
निस्तत्वे निष्कली भूते
विंद त्यात्मनि यत्सुखम्॥३८॥

निर्विकल्प मचिंत्यंच
हेतु दृष्टांत वर्जितम्॥
तत्सुखं परमं प्रोक्त
मात्यंतिक मनौपमम्॥३९॥

அசிந்த்யம் சிந்தயேத் நித்யம் கர்த்வா சித்தம் நிராச்ரயம்।
நிஸ்தத்வே நிஷ்கலீ பூதே விந்ததி ஆத்மனி யத் சுகம்॥

நிர்விகல்பம் அசிந்த்யம் ச ஹேது த்ருஷ்டாந்த வர்ஜிதம்।
தத் சுகம் பரமம் ப்ரோக்தம் ஆத்யந்திகம் அனௌபமம்॥

Achintyam chintayennityam kṛtvā chittam nirāśrayam
nistatve nishkalī bhute vindatyātmani yatsukham

Nirvikalpamachintyam cha hetu dṛshṭānta varjitam
tatsukham paramam prokta mātyantika manaupamam

சிந்தைசெய் வாய்தினமுஞ் சிந்தைக்கெட் டாததையே
சிந்தை நிராசிரயஞ் செய்தேநீ – யெந்தசுக
மத்தத்து வாதீத நிட்கள வான்மாவிற்
சித்தித் திடுமோ செறிந்து.

நிருவிகற்ப மாகி நினைக்கவொண் ணுதா
யொருமுதறிட் டாந்த முருதா – யொருவுவமை
யற்றத்தி யந்தமா மம்ஃதுபரா னந்தமாய்ச்
சொற்றிடப் பெற்றததிற் ரேய்.

சிந்தை செய்வாய் தினமும் சிந்தைக்கு எட்டாததையே
சிந்தை நிராசிரயம் செய்தே நீ எந்த சுகம்
அத் தத்துவ அதீத நிட்கள ஆன்மாவிற்
சித்தித்திடுமோ செறிந்து.

நிருவிகற்பமாகி நினைக்க ஒண்ணுதாய்
ஒரு முதல் திட்டாந்தம் உருதாய் ஒரு உவமை
அற்று அத்தியந்தமாம் அஃது பரானந்தமாய்
சொற்றிடப் பெற்றது அதில் தோய்.

38 & 39 பொழிப்புரை: முதலில் விடயமாய்த் தியானத்துக்கு ஒன்றும் இன்மையாக்கி, அவ்வாற்றால், விடயமாய்த் தியானத்துக்கெட்டாத அப்பரமான்ம வஸ்துவை நீ இடை விடாது தியானஞ் செய். தத்துவங் கடந்ததும் நிட்களமுமான அவ்வான்மாவில் எந்த சுகம் நிரம்ப அடையப்பெறுமோ, விகற்ப மற்றதும் கருதமுடியாததும் தனக்கொரு முதலும் உதாரணமும் இல்லதும் உவமையற்றதும் அத்தியந்தமும் ஆன அதுவே பரசுகமாய் நூல்களில் சொல்லப் பட்டதாம் – அதில் நீ தோய்வாய்.

விசேடவுரை: சிந்தைக்கெட்டாததைச் சிந்திக்கு முபாயங் கூறுவார், சிந்தை நிராசிரயஞ்செய் தென்றார். ஒன்றையுஞ் சிந்தியாதிருந்தபடி யிருத்தலே சிந்தைக் கெட்டாததை சிந்தித்த லென்பது கருத்து. சிந்தையறச் சிந்தித்த லென்பதுமது. உள்ளபொருள் உள்ளலற வுள்ளத்தே யுள்ளதால் அவ் வுள்ளத்தே அவ்வாறு உள்ளலற்றுத் தானுமுறைதலே அதனை உள்ளவாறுள்ளல் என உள்ளது நாற்பதினு முரைக்கப்பட்டது. இத்திரு வெண்பா விரண்டாலும், தன்மயநிட்டையும், அதனு லெய்தும் ஆன்மசுகமே அனைத்தினும் சிறந்த சுகமென்பதுங் கூறப்பட்டன.

Meditate ever on that
Which is beyond the reach of the mind
Allowing no refuge for the mind.
The joy that is attained in abundance in that Self,
That is beyond all verities and complete. (38)

Without any differences,
and beyond the reach of thinking,
Without any precedent,
Without anything similar,
That which is the utmost frontier
and extolled as the supreme bliss,
Be immersed in it. (39)

निरस्य विषयासंगं
मनोवृत्तिं विवर्जयेत् ॥
यदा यात्युन्मनी भावम्
तदा तत्परमम् सुखम् ॥ ४०॥

निरस्य विषयासङ्गं मनोवृत्तिं विवर्जयेत् ।
यदा आयाति उन्मनीभावं तदा तत् परमं सुखम् ॥

Nirasyavishayāsaṅgam manovṛttim vivarjayet
yadāyātyunmanī bhāvam tadā tatparamam sukham

விடயப்பற் றெல்லாமே விட்டு மனத்திற்
படரும் விருத்தி படுப்பா – யடையுமென்
றுன்மனி பாவமன் றொன்றும தேபரம
வின்ப மெனலாவ தே.

விடயப்பற்று எல்லாமே விட்டு மனத்திற்
படரும் விருத்தி படுப்பாய் அடையும் என்று
உன்மனி பாவம் அன்று ஒன்றும் அதே பரம
இன்பம் எனல் ஆவதே.

பொழிப்புரை: விடயப்பற்றுக்களெல்லாம் விட்டு, அவ்வாற்றூல் (கடலினலே போல் ஒன்றன் பின் ஞென்றாய்) மனத்தின்கண் (மேன்மேல்) எழும் நினைப்புகளே யெல்லாம் அழிப்பாய். (இவ்வுபாயத்தால்) நிருவிகற்பநிலே என்று அடையப்பெறுமோ அன்று தோன்றுவதே பரமசுகம் என்றுரைக்கப்படுவதாம்.

விசேடவுரை: மனத்தை யலைக்கும் விருத்திகள் விடயங் களைப் பற்றியே விளைதலின் அவ்விருத்தி நாசத்துக்குபாயங் கூறுவார், விடயப்பற்றெல்லாமே விட்டென்றார். மன வொடுக்கம் பயில்வோன் விடயங்களை விடுத்து அவற்றின் காரியமாம் விருத்திகளை மாய்க்குங்கால் விடயமின்மையால் மனம் உறக்கமுறின் அப்பொழுது எண்ணமிலனாந்தா னெண்ணமோ டொன்றி அதனை யுறக்கத்தினின்று முணர்த்தி இவ்வாறு ஒடுக்கலுணர்த்தல்களை இடைவிடாது மாறிமாறிச்

செய்ய அப் பயிற்சியால் உறக்கமலை விரண்டு மொருங் கொழிந்து கேவலவுணர் வுருவாய் விளங்கும் அவ்வுபசாந்த நடுநிலையே உன்மனி பாவமாம்.

''உறக்கத்தி னின்று முணர்த்திடுக சித்த
முறிற்சலனம் பின்ன ரொடுக்கா – யுறக்க
மலைவென்னு மிவ்விரண்டு மற்றநிலை யுற்ரு
னிலையிதனி னிச்சலமா நில்''

எனத் தேவிகாலோத்தரமோதல் காண்க. நனவிற் சுழுத்தி யென்றுரைக்கப்படுவதுமது. ஆன்மசொரூபமான அப்பரம வின்பம் அநாதியே யென்றுமுளதாயினும் சகலாவத்தையில் மனம் விடயப்பற்றுக் கொண்டு வெளியில் அலைதலாலும் கேவலாவத்தையில் தன்னை மறந்து மயங்கலாலும் இவ்விரண் டவத்தைகளிலும் எத்துணைப் பாடுபட்டுந் தோன்றுது, சுத்தாவத்தையாகிய அவ்வுன்மனிபாவமடைந்த பின்பே உணர் வாதலால் அப்பொழுது தானுண்டானதுபோல அடையுமென்று உன்மனிபாவ மன்றென்றுமதே யெனக் கூறப்பட்டது.

Discarding all desire for objects,
Destroying the modes of the mind,
The non-dual state of being the One,
When the mind ceases to be,
Is the one called the supreme bliss. (40)

सर्व दिग्देश कालेषु
यो गा भ्यासो विधीयते ॥
सर्व वर्ण आश्रमाणांच
ज्ञान भेदो न विद्यते ॥४३॥

सर्व दिक् देश कालेषु योग अभ्यासः विधीयते ।
सर्व वर्ण आश्रमाणां च ज्ञान भेदः न विद्यते ॥

Sarvadigdeśa kāleshu yogābhyaso vidhīyate
sarva varṇāśramāṇām cha jñāna bhedo na vidyate

எத்திக்கு தேயமு மெல்லாக்கா லங்களுமே
யொத்ததுயோ கத்திற்கென் ரோதுநூ – லித்தனையு
ஞானத்திற் பேதமே நண்ணுவர் ணுசிரம
மானவிவற் ருலென் றறி.

எத்திக்கு தேயமும் எல்லாக் காலங்களுமே
ஒத்தது யோகத்திற்கு என்று ஓது நூல் இத்தனையும்
ஞானத்தில் பேதமே நண்ணு வர்ண ஆசிரமம்
ஆன இவற்ருல் என்று அறி.

பொழிப்புரை: யோகத்திற்குத் திசாதேச காலங்கள் யாவுமே யொக்கப் பொருந்து மெனவும், வருணுசிரம பேதத்தாலும் ஞானத்திற் பேதமுளதாகா தெனவும் நூல்கள் ஓதுவனவாம்.

விசேடவுரை: திசாதேசகாலங்கள் உள்ளத்தினின்று வெளிப்பட்ட மனத்தின் கற்பனைகளே யாதலால் அவை யாவும் அம்மனோமயமான உலகியற் செயல்களுக்குப் போலன்றி அம் மனம் மீளத் தன் பிறப்பிடமான அவ் வுள்ளத்துட் புக்கொடுங்கும் ஆன்மயோகத்துக் கொக்கப் பொருந்துவன வாதலும் அன்றியும் வருணுசிரம பேதங்கள் உபாதிகளே யொட்டியனவே யாதலால் அவ் வுபாதிரகிதமான ஆன்ம ஞானத்தில் அவற்ருற் பேத மெய்தா தாதலுங் காண்க.

All directions, all places, all times,
Are conducive for the yoga of the Self,
so say the scriptures.
Differences of castes and orders of life and such,
Cannot cause any differences in the least,
to the nature of knowledge. (41)

गवा मनेकवर्णानाम्
क्षीरस्या प्येकवर्णता ॥
क्षीरवच्छ्रूयते ज्ञानम्
किं गिनश्च गवां समाः ॥४२॥

गवाम् अनेक वर्णानां क्षीरस्य अपि एक वर्णता ।
क्षीरवत् दृश्यते ज्ञानं लिङ्गिनः च गवां समाः ॥

Gavāmanekavarṇānām kshīrasyāp yekavarṇatā
kshiravat dṛśyatejñānam linginascha gavāmsamaḥ

பால்வண்ண மொன்று பசுக்கள் பலநிறங்கள்
பால்போலு ஞானமெனப் பார்த்திடுவர் – சால்புபல
லிங்கமுள வெல்லாம் பசுக்கூ யேய்ந்தவே
யிங்கறிதிட் டாந்த மிது.

பால் வண்ணம் ஒன்று பசுக்கள் பல நிறங்கள்
பால் போலும் ஞானம் எனப்பார்த்திடுவர் சால்பு பல
லிங்கமுள எல்லாம் பசுக்கூ ஏய்ந்தவே
இங்கு அறி திட்டாந்தம் இது.

பொழிப்புரை: *பசுக்கள் பலநிறத்தனவாயினும் அவற்றின் பால் ஒரே நிறத்ததாம். பலதிறப்பட்ட குறிகளையுடைய அவ் வருணசிரமங்கள் எல்லாம் பசுக்களைப்போன்று வேறு பட்டனவாம். (எனினும்) அவற்றுக்கெல்லாம் ஞானம் மட்டும் பால்போலப் பொதுவாம் என்றறிஞர் காண்பர். (ஆதலின் இவ் வுண்மைக்கு) அறியத்தகு முதாரணமிதுவாம்.*

விசேடவுரை: *முந்திய திருவெண்பாவில் வருண சிரம பேதங்களால் ஞானபேத நண்ணுமை கூறியவர் இத் திரு வெண்பாவால் அதற்கோருதாரணங் கூறினர்.*

The colour of milk is one,
the colours of the cows many,
So is the nature of knowledge,
observe the wise ones.
Beings of various marks and attributes,
Are like the cows, their realisation is the same;
this is an example we should know. (42)

यस्मात्सर्वगतं ब्रह्म
व्यापकं सर्वतोमुखं ॥
तस्माद्ब्रह्मणि संस्थस्य सत्
दृष्टेष्टाद्य विचारयेत् ॥ ४२॥

यस्मात् सर्वगतं ब्रह्म व्यापकं सर्वतः मुखम् ।
तस्मात् ब्रह्मणि संस्थः सन् दिक् देशात् न विचारयेत् ॥

Yasmātsarvagatam brahma vyāpakam sarvatomukham
tasmātbrahmani samsthaḥ san dig deśān na vichārayet

யாவிலுமுற் றுப்பரவி யப்பிரம மெங்குமுக
மேவிய தாக மிளிர்வதா – லோவலற
வுன்மனத்தை யப்பிரமத் தூன்றியே தேயந்திக்
கென்னுமிவை யெண்ணிடா தே.

யாவிலும் உற்றுப் பரவி அப்பிரம்மம் எங்கும் முக
மேவியதாக மிளிர்வதால் ஓவல் அற
உன் மனத்தை அப்பிரம்மத்து ஊன்றியே தேயம் திக்கு
என்னும் இவை எண்ணிடாதே.

பொழிப்புரை: அந்தப் பிரமவஸ்து திசாதேசகாலங்கள் யாவற்றிலு மொக்கப்பரவி நின்று எங்கும் முகமுடைத்தாக விளங்குதலால் அவற்றைச் சற்றும் எண்ணுதொழித்து, அந்தப் பிரமவஸ்துவின் கண்ணே உன் மனத்தை இடையறுது நிலை பெறுத்து.

விசேடவுரை: 41ஆம் திருவெண்பாவில் பரமான்ம யோகப் பயிற்சிக்கு எல்லாத் திசாதேசகாலங்களும் ஒக்கப் பொருந்து மெனக் கூறியவர் இத்திருவெண்பாவால் அதற்குக் காரணங் கூறுவார், யாவிலு முற்றுப்பரவிய பிரம மெங்குமுக மேவியதாக மிளிர்வதா லெனவும், உய்த்துணரவல்லார்க்கு, உள்ளது பிரமமொன்றே யாதலால் உன் மனத்தை யப்பிரமத்தூன்றியே யெனவும், ஏனைத் திசாதேசகாலங்கள் கயிற்றிற் பாம்பும் கட்டையிற் கள்வனும் போல அவ் வஸ்துவிற் கற்பனைகளே யாதலால் தேயந்திக்கென்னுமிவை யெண்ணிடாதே யெனவும் கூறினர். சிலர் கருதுமாறு பரமான்மயோகப் பயிற்சியின் முன்னேற்றத்தை எந்தத் திசாதேசகாலமும் சற்றுந்தடை செய்யா தென்பது தாற்பரியம். தேயந்திக்குக் காலத்துக்கும் உபலக்ஷணம்.

Brahman intimately pervades all,
It shines with faces in all directions.
Established in it without a pause,
Think not of differences
such as regions and directions. (43)

नैव तस्य कृतेनार्थो
न कार्यो न विधिः स्मृतः॥
न लिङ्गं नाश्रमाचारः
स्थितस्य परमात्मनि ॥४४॥

न एव तस्य कृतेन अर्थः न कार्यः न विधिः स्मृतः ।
न लिङ्गं न आश्रम आचारः स्थितस्य परमात्मनि ॥

Naiva tasya kṛtenārtho na kāryo na vidhiḥ smṛtaḥ
na lingannāsramāchāraḥ sthitasya paramātmani

இப்புவியி லோர்குறியின் ருசிரமா சாரமிலை யப்பரமான் மாவினிலை யார்ந்தோனுக் - கப்புருடன் செய்ததனு லொன்றில்லை செய்திடவு மொன்றில்லை செய்யென் விதியுமிலை தேர்.

இப்புவியில் ஓர் குறியின்று ஆசிரமம் ஆசாரம் இலை அப்பரமான்மாவின் நிலை ஆர்ந்தோனுக்கு அப்புருடன் செய்ததனுல் ஒன்றில்லை செய்திடவும் ஒன்றில்லை செய்யென் விதியும் இலை தேர்.

பொழிப்புரை: இவ்வுலகில் அந்தப்பரமான்மாவில் நிலைபெற்றவனுக்கு ஒரு குறியுமில்லை; ஆசிரமாசாரமுமில்லை. அம்மகாபுருடன் ஒன்றைச் செய்ததனுலடையும் பயனுமில்லை. கடமையாகச் செய்யத்தகுங் கன்மமும் அவன் செய்தற் கொன்றில்லை. ஒன்றனைச் செய்யென்னும் விதியும் அவன் மாட்டில்லை.

விசேடவுரை: ஆசிரமாசாரம், வருணாசாரத்துக்கும் உபலக்ஷணம். சகஜநிஷ்டனைக் குறித்து நிலையார்ந் தோனுக் கென்றார்.


''மனவுரு மாயமெய்ம் மன்னுமா யோகி
தனக்கோர் செயலில்ல யுந்தீபற''

எனவரும் உபதேச வுந்தியாரும்

''தன்னை யழித்தெழுந்த தன்மயா னந்தருக்
கென்னை யுளதொன் றியற்றுதற்கு''

எனவரும் உள்ளது நாற்பதும் உற்று நோக்குக. விதியுமில்ல என்றதனால் அவனுக்கு ஒன்றுனச்செய்தலாகாதென்ற விலக்கு மில்ல என்றவாறுயிற்று.

In this world itself, there is no mark,
lifestyle or tradition,
For the one who becomes
of the nature of the Self.
He has nothing to gain by any action of his,
no action need he perform,
Nor any injunctions prescribing actions
apply to him—know this. (44)



गच्छन् तिष्ठन् स्वपन् जाग्रन्
भुंजानोपि पिबन्नपि ॥
सर्वदा सर्वकालेषु
वात शीतातपेषुच ॥ ४५॥

भय दारिद्र रोगेषु
मांद्य विज्वरकादिषु ॥
आत्मन्येव स्थित शांत
आत्मतृप्तस्तु निष्कलः ॥ ४६॥

गच्छन् तिष्ठन् स्वपन् जाग्रन् भुंजानः अपि पिबन् अपि ।
सर्वदा सर्वकालेषु वात शीत आतपेषु च ॥

भय दारिद्र्य रोगेषु मान्द्य विज्वरक आदिषु ।
आत्मनि एव स्थितः शान्त आत्मतृप्तः तु निष्कलः ॥

Gachchhansthishṭan svapan jāgran bhunjāno'pi pibannapi
sarvadā sarvakāleshu vāta śītā' tapeshu cha

Bhayadāridṛya rogeshu māndya vijvarakādishu
ātmanyevasthitaḥ śanta ātmatṛptastu nishkalaḥ

செல்லினு நிற்கினு நித்திரை செய்யினும்
புல்லினுஞ் சாக்கிரம் போசனநீர் - கொள்ளினுங்
காற்றுகுளிர் வெய்யிற் கலந்திடுங் காலுமெவ்
வாற்றினுமெக் காலத்து மற்று.

பயமும் வறுமைநோய் பற்றுசுர மந்த
மியைந்திடுங் காலத்து மேதுந் - தியங்கானே
யான்மநிட் டன்சாந்த ஞர்நிட் களஞகி
யான்ம திருத்தஞ வான்.


செல்லினு நிற்கினு நித்திரை செய்யினும்
புல்லினும் சாக்கிரம் போசன நீர் கொள்ளினும்
காற்று குளிர் வெய்யில் கலந்திடும் காலும்
எவ்வாற்றினும் எக்காலத்தும் அற்று.

பயமும் வறுமை நோய் பற்று சுர மந்தம்
இயைந்திடும் காலத்தும் ஏதும் தியங்கானே
ஆன்ம நிஷ்டன் சாந்தன் ஆர் நிஷ்களஞகி
ஆன்ம திருத்தன் ஆவான்.

45 & 46 பொழிப்புரை: நடப்பினும், நிற்பினும், உறக்கங் கொள்ளினும், விழிப்புப் பொருந்தினும், அன்ன பான மருந்தினும், காற்று குளிர் வெய்யில் இவை (மிகப்) பொருந்துங் காலத்தும், அவ்வாறே அச்சம், வறுமை, நோய், காய்ச்சல், அஜீரணம் இவை பற்றுங் காலத்தும், மற்றெக் காலத்தும் எவ்விதத்தும் இவற்றுற் சற்றுங் கலங்காமல் ஆன்மநிட்டன் சாந்தனுயும் நிட்களனுயும் ஆன்மாவில் அமைதி பெற்றவனுவன்.

Moving or standing or sleeping,
Waking or taking food or water,
In the face of the wind, the cold and the sun,
Unaffected will he be,
in any state, at any time. (45)

Fear, indigence, sickness and
burning fever, indigestion —
Even when all these affect,
One established in the Self —
Peaceful and shining in full —
He is never at his wit's end on any count;
he will savour the satisfaction of the Self. (46)



न आगतः अहं गतः वा अपि न आगमिष्ये न मे गतिः ।
न भूतः न भविष्यामि प्रकृति अस्थिर धर्मिणि* ॥

Nāgato'ham gato vāpi nāgamishye na me gatiḥ
na bhūto na bhavishyāmi prakṛtyasthira dharmiṇi

போனலும் வந்தாலும் போனவன் வந்தவனு
நானகேன் போக்குவர ஞடினிலை - நானப்
பிரகிருதி தன்மாறப் பெற்றதரு மந்தோய்ந்
திருந்தோ னிருப்போ னலன்.

போனலும் வந்தாலும் போனவன் வந்தவனும்
நான் ஆகேன் போக்குவரல் நாடின் இலை நான் அப்
பிரகிருதி தன் மாறப் பெற்ற தருமம் தோய்ந்து
இருந்தோன் இருப்போன் அலன்.

பொழிப்புரை: போனலும் வந்தாலும், போனவன் வந்தவனும் நானல்லன்; ஏனெனில், ஆராயின் (பூரணனு மெனக்குப்) போக்குவரத்தில்லே; அன்றியும் இடைவிடாது மாறும் அந்தப்பிரகிருதி தருமத்துக் குட்பட்டவனும், படு பவனும் நானல்லன்.

விசேடவுரை: போதல் வருதல் உபாதிகளே யொட்டியவை யாதலாலும், தான் நிருபாதிகனுதலாலும், போனலும் வந்தாலும் போனவன் வந்தவனு நானுகேன் என்றும், தான் ஆகாயம் போற் பூரணனுதலிற் போக்குவரத்துக் கூடாமையின் தனக்குளவாகத் தோற்றுமவை அவிசாரத்தா லடைந்தனவே யென்பார் போக்கு வரனுடினிலே யென்றும், பிரகிருதி தர்மங்களான மாற்றங்கள் அப்பிரகிருதிக் கதிஷ்டானமாய் அப் பிராகிருதமான தனக்கென்று மின்மையின் நானப் பிரகிருதிதன் மாறப் பெற்ற தருமந் தோய்ந்திருந்தோ னிருப்போனலன் என்றுங் கூறினர். போக்குவரனுடினிலே யென்னுமிவ் வுண்மையே,

> ''குடங்கொண்டு போங்காற் குடத்துளா காய
> முடன்செல்வ தாக வுணர்ந்துங் - குடந்தானே
> சென்றிடுவ தாகாயஞ் செல்வதிலே யான்மாவு
> நின்றிடுமே யாகாய நேர்''

என்னுந் திருவெண்பாவில் உதாரணபூர்வமா யுரைக்கப் படுவதென்க.

Whether going forward or returning,
I am not the one that moves
Forward or back. When enquired into
there is no going or coming.
In the ever changing dharma of Prakrti,
the cause of illusive creation,
I never was immersed, nor am I now. (47)

**Note* :– Variant text of fourth line:
नाहं प्रकृति धर्मभाक्
Sri Bhagavan, in Tamil, incorporates both variants.

प्राकृतानि तु कर्माणि
प्रकृतिः कर्म संभवा।
नाहं किंचित् करोमीति
युक्तो मन्येत तत्ववित् ॥४८॥

प्राकृतानि तु कर्माणि प्रकृतिः कर्म संभवा ।
न अहं किंचित् करोमि इति युक्तः मन्येत तत्त्ववित् ॥

Prākṛtāni tu karmāṇi prakrtiḥ karma sambhavā
na'ham kinchitkaromiti yukto manyeta tattvavit

பிரகிருதி காரியமாங் கன்மங்கள் பேசும்
பிரகிருதி கன்மப் பிறப்பே - நிருமலன்
யானேர் செயலிலனென் றேயுக்த தத்துவவித்
தானே னனுசந்திப் பான்.

பிரகிருதி காரியமாம் கன்மங்கள் பேசும்
பிரகிருதி கன்மப் பிறப்பே நிருமலன்
யான் ஓர் செயல் இலன் என்றே யுக்த தத்துவ
வித்தானேன் அனுசந்திப்பான்.

பொழிப்புரை : கன்மங்கள் பிரகிருதியின் செயல்களும், அந்தப் பிரகிருதி கன்மத்தோற்றமு மாம். நானே அப் பிராகிருதன், அகர்த்தா என்றே தக்கோனுந் தத்துவஞானி கருதுவன்.

விசேடவுரை: தனித்தனி சிறப்பித்துக் கூறப்படும் கன்ம மும் பிரகிருதியும் ஒன்றுக் கொன்று காரியமாம். தன்னுண்மை நிலைசார்ந்த தத்துவஞானி தன்னை அப்பிராகிருதனுகவும், அகர்த்தாவாகவும் அறிந்தமைந் தொழுகுவன்.

பிராரப்த கன்மமான விதியும் ஜீவப் பிரகிருதியான மதியும் இரண்டும் அநாதியாதலால் இதற்கிது முற் பட்ட தெனக் கூறலாகாமையின் அவை ஒன்றுக்கொன்று காரியமாகக் கூறப்பட்டன. ஆன்மாவை விட்டவிடத்தல்லது உண்மையில் இரண்டுக்கு மிருப்பின்மையின் அவ்வாறுரைப்பதிற் சற்று

மிழுக்கில்லை யென்க. பேசுங் கன்மங்களென விசேடணத்தைக் கன்மங்களோடும், பிரகிருதிகள் கன்மப் பிறப்பெனப் பன்மை யைப் பிரகிருதியோடுங் கூட்டுக. உயிர்கள் பலவாதலின் அவற்றைப் பற்றிய விதி (கன்மம்) மதி (பிரகிருதி)களும் பலவாயின. கன்மப்பிறப்பு கன்மத்தினின்று பிறந்தது. பஞ்ச கோசங்களுள் யாதானு மொன்றைப் பற்றி நிற்கும் ஆணவமலமே வியத்தித்துவ மாதலின், நிருமலன் என்றது வியத்தித்துவ மற்றவனென்றவாறு. கர்த்தத்துவ மின்றேல் ஊழ் வினை பற்றி யுடற்றலும் வியத்தித்துவ மின்றேல் அகந்தைமதி பற்றி யலைத்தலு மாகாமையின் பாமரர் விதிமதி யாட்சிக் குள்ளாதற்குக் கர்த்தத்துவமும், வியத்தித்துவமுமே வாயில்க ளாதலால் தத்துவஞானி அவை யற்றவனுகவே அவ்விதி மதிகளைக் கடந்து விளங்குவ னென்பதாம். விதிமதிகளைச் சார்ந்து நின்ற வழி தன்னிலை தவறுமாறுபோலத் தன்னிலையைச் சார்ந்து நின்ற வழி அவை யகலு மென்றறிக.

> ''ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
> சூழினுந் தான்முந் துறும்''

என மதியின் வலிதாகக் கூறும் விதியும்,

> ''ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
> தாழா துஞற்று பவர்''

என விதியின் மிக்கதாகக் கூறும் மதியும் ஒன்றுக்கொன்று காரியமாதலால் அவற்றுயர்வு தாழ்வுகளைப் பற்றிய ஆராய்ச்சி அவலமாமென்றும், அவையுளவாதற் கின்றியமையாது வேண்டப்படும் முதலான தன்னைப்பற்றி யாராய்ந்தறிந்த வழி அவை கதிரவன் முன்னர்க் காரிருள்போலக்கடிது நீங்கலால், அவ்வாராய்ச்சியே அறிஞர் செயத்தக்கதா மென்றும் கூறியவாறுயிற்று.

> ''விதிமதி மூல விவேக மிலார்க்கே
> விதிமதி வெல்லும் விவாதம் —— விதிமதிகட்
> கோர்முதலாந் தன்னை யுணர்ந்தா ரவைதணந்தார்
> சார்வரோ பின்னுமவை சாற்று''

என்னும் உள்ளது நாற்பது இத்திருவெண்பாவின் பொருளை யுணரப் பெரிது முதவுவதாம்.

All activities prescribed,
are the work of Prakrti, the illusion.
Prakrti, so spoken of, is the source of all action.
'I am the immaculate', 'I am the actionless',
thus indeed will reflect
The wise man, the knower of truth. (48)

नैव प्रकृति बंध्यो स्ति
मुक्त इत्य भि धीयते ।
नचैव प्राकृतै र्दोषैः
लिप्यतेतु कदाचन ॥ ४९ ॥ स

न एव प्रकृतिबन्धः अस्ति मुक्त इति अभिधीयते ।
न च एव प्राकृतैः दोषैः लिप्यते तु कदाचन ॥

Naiva prakṛti bandho'sti mukta ityabhidhīyate
na chaiva prakṛtairdoshaiḥ lipyate tu kadāchana

அவற்குப் பிரகிருதி யாற்பந்த மில்லை
யவன்முக்த னும மடைந்தா – னவன்ருன்
பிரகிருதி காரியமாப் பேசுதோ டத்தா
லொருபொழுது மொட்ட லுருன்.

அவற்குப் பிரகிருதியால் பந்தமில்லை
அவன் முக்த நாமம் அடைந்தான் அவன்தான்
பிரகிருதி காரியமாப் பேசு தோடத்தால்
ஒரு பொழுதும் ஒட்டல் உருன்.

பொழிப்புரை: *அவனுக்குப் பிரகிருதியாற் பந்தமில்லை. அவன் முக்தனென்னும் பெயரை யடைந்தான். பின்னுமவன் பிரகிருதியின் காரியங்களாகச் சொல்லப்படுங் குற்றங்களாலும் ஒரு பொழுதும் பற்றப்பட மாட்டான்.*

For him there is no bondage of Prakrti, the delusion,
He has earned the name of the liberated one,
He shall never be touched by the defects
Spoken of as the action of Prakrti. (49)

निर्णाश्य तमसो रूपम्
दीपो यद्वत्प्रकाशते ॥
आभात्येवं परोह्यात्मा
त्यक्त्वैवाऽज्ञानजं तमः ॥५०॥

निर्णाश्य तमसः रूपं दीपः यद्वत् प्रकाशते ।
आभाति एवं परः हि आत्मा त्यक्त्वा एव अज्ञानजं तमः ॥

Nirṇāśya tamaso rūpam dīpo yadvatprakāśate
ābhātyevam parohyātma tyaktvaivā' jñānajam tamaḥ

ஒளியா லிருளி னுருவ மொழித்து
விளக்கெவ் விதந்தான் விளங்கும் – விளக்கமி
லஞ்ஞானத் துண்டாகி யாரிருளா மாய்த்தொளிருஞ்
சுஞ்ஞான சோதியான் மா.

ஒளியால் இருளின் உருவம் ஒழித்து
விளக்கு எவ்விதம் தான் விளங்கும் விளக்கம் இல்
அஞ்ஞானத்து உண்டாகி ஆர் இருளா மாய்த்து ஒளிரும்
சுஞ்ஞான ஜோதி ஆன்மா.

பொழிப்புரை: விளக்கு எவ்வாறு தன்னொளியால் இருளின் வடிவத்தைக் கெடுத்து விளங்குமோ அவ்வாறே அறிவொளியாகிய நல்லான்மாவும் தெளிவற்ற அறியா மையினின்று தோன்றிய இருளா (விருத்தி ஞானத்தாற்) கெடுத்து விளங்கும்.

விசேடவுரை: சொரூபஞானம் அஞ்ஞானத்தைத் தடை செய்யாமையின் விருத்திஞானத்தா லெனப்பட்டது.

The manner in which a lamp shines,
Destroying darkness with its light — in like manner,
By destroying the enveloping darkness,
arising from inexplicable ignorance,
The Self, of the nature
of the pure light of knowledge, shines. (50)

स्नेह क्षया व्यथा दीपो
बला निर्वाण मृच्छति ।
त आत्म भावना युक्त :
स्वात्मन्येवाव तिष्ठते ॥ ५३॥

स्नेह क्षयात् यथा दीपः बलात् निर्वाणं ऋच्छति ।
तथा आत्मभावनायुक्तः स्व आत्मनि एव अवतिष्ठते ॥

Śneha kshayādyathā dipo balānnirvāṇamṛchchhati
tathātma bhāvanā yuktaḥ svātmanyevāva tishṭate

நெய்தீர்ந்த தீபந்தா னிர்வாண முற்றிடல்போன்
மெய்யான்ம சிந்தை விடாமலே - செய்யோகி
யான்மாவின் கண்ணேயே யார்ந்திருப்ப ஞன்மாவின்
மேன்மேவ வொன்றின்று மெய்.

நெய் தீர்ந்த தீபம் தான் நிர்வாணம் உற்றிடல் போல்
மெய் ஆன்ம சிந்தை விடாமலே செய் யோகி
ஆன்மாவின் கண்ணேயே ஆர்ந்திருப்பன் ஆன்மாவின்
மேல் மேவ ஒன்று இன்று மெய்.

பொழிப்புரை: நெய்யற்ற விளக்கு சூனியமடைதல் போன்று உண்மையான ஆன்மதியானத்தை இடைவிடா தியற்றும் ஞான யோகியும் அவ்வான்மாவின்கண்ணே நிலை பெற்றமைவன். அவ்வான்மாவினுஞ் சிறந்து ஒருவன் அடையத் தகும் பேறு உண்மையாகவே வேறென்றுமின்று.

விசேடவுரை: விளக்கு எரிதற்குக் காரணமான நெய் தீர்ந்தவுடன் தன்னிற்றானடங்கி விடுதல் போன்று, நால் வகைத் தோற்றத்தோடு கூடிய எழுவகைப் பிறப்பினுள்ளும் ஒருவன் சென்றுழல்வதற்குக் காரணமான கன்மத்தொடர்பு தைலதாரை போல் அவிச்சின்னமான ஆன்ம சிந்தையா லழிவெய்துங் கர்த்தத்துவ வடிவ அகந்தையோடு உட னழிதலின் ஆன்மாவின் கண்ணேயே யார்ந்திருப்பன் எனவும், ஆன்மசித்தனுக்குப் பிறசித்திகள் வேண்டாமென்பர். ஆன்மாவின் மேன் மேவ வொன்றின்று மெய் யெனவும் கூறினர்.

''ஆன்ம லாபத்தினு மன்னியமாம் பேறு
தான்மற்றொன் றெங்குமே தானில்லே.''

என முன்னுங் கூறப்பட்டது.

''சித்தமா யுள்பொருளைத் தேர்ந்திருத்தல் சித்திபிற
சித்தியெலாஞ் சொப்பனமார் சித்திகளே — நித்திரைவிட்
டோர்ந்தா லவைமெய்யோ வுண்மைநிலே நின்று
[பொய்ம்மை
தீர்ந்தார் தியங்குவரோ தேர்''

என்னும் உள்ளது நாற்பதனுதவியால் இவ் வுண்மையை நன் குணர்க. சூனியமாதல் - உருவழிதல்; அங்ஙனமே முத்தனுக்கும் அன்னியர் நோக்காலன்றி வியத்தித்துவ மின்றெனக் கொள்க.

Even as the lamp, with the fuel of ghee spent,
attains nirvana, (peace),
The yogi, continuously contemplating
on the Truth of the Self,
Will be at peace in the Self,
Nothing greater is there to be attained
than the Self, this is the truth. (51)

घट संवृत माकाशं
नीयमाने यथा घटे ॥
घटो नीयेति नाकाशं
तद्वज्जीवो न भोऽपमः ॥५२॥

घट संवृतम् आकाशं नीयमाने यथा घटे ।
घटः नीयेत न आकाशं तद्वत् जीवः नभः उपमः ॥

Ghaṭa samvṛtamākaśam nīyamāne yathā ghaṭe
ghaṭo nīyeta nākāśam tadvad jīvo nabho'pamaḥ


குடங்கொண்டு போங்காற் குடத்துளா காய
முடன்செல்வ தாக வுணர்ந்துங் - குடந்தானே
சென்றிடுவ தாகாயஞ் செல்வதிலை யான்மாவு
நின்றிடுமே யாகாய நேர்.

குடம் கொண்டு போங்கால் குடத்து உள ஆகாயம்
உடன் செல்வதாக உணர்ந்தும் குடம் தானே
சென்றிடுவது ஆகாயம் செல்வதிலை ஆன்மாவும்
நின்றிடுமே ஆகாய நேர்.

பொழிப்புரை: குடம் (இடம்விட்டிடம்) கொண்டு போகப்படும் பொழுது குடத்துட் பொருந்திய ஆகாயமும் உடன் கொண்டுபோகப்படுவதாக ஒருவன் கருதினும் எப்படிக் குடம்மட்டுமே கொண்டுபோகப்படுவதாமோ, ஆகாயம் கொண்டுபோகப் படுவதில்லையோ, அப்படியே ஆன்மாவும் ஆகாய நிகர்த்து (நின்றுங்கே) அசைவற நிற்கும்.

விரிவுரை: குடம் புடைபெயர்ச்சியுறுங்கால் குடத்துள வாகாயமும் அதனுடன் புடைபெயர்ச்சியுறுவதாகக் காண்பதே போல் உடலுயிர்கள் பிறப்பிறப்புகளிற் சென்றுழலுங்கால் ஆன்மாவும் உடனுழல்வதாகக் கருதுவது மனமயக்கமேயா மெனவும் அவ்விதங் காணினும் அவ்வாகாயம் எவ்வாறிருந்த படிக்கே யிருப்பதாமோ அவ்வாறே ஆன்மாவும் எஞ்ஞான்றும் போல நின்ற நிலைக்கே நிற்பதாமெனவும் அறிக. 47ஆம் திருவெண்பாவில் காரணத்தோடு ஆன்மாவுக் கசலத்துவங் கூறியவர் இத்திருவெண்பாவால் அதற்கோருதாரணங் கூறினர்.

When the pot is carried, the space within the pot,
Though conceived of as carried,
Is it not the pot only that is carried?
The Self too, like Space, remains motionless. (52)



भिन्ने कुंभे यथा आकाशं आकाशत्वं प्रपद्यते ।
विभिन्ने प्राकृते देहे तथा आत्मा परमात्मताम् ॥

Bhinne kumbhe yathā'kāśa mākāśatvam prapadyate
vibhinne prākṛte dehe tathātma paramātmatām

குடமுடை யுங்காற் குடத்துளவா காய
முடன்மகா காயமோ டொன்றுஞ் - சடமா
முடலக லுங்கா லுடலுளவான் மாவு
முடன்பரமான் மாவா யுறும்.

குடம் உடையுங்கால் குடத்து உள ஆகாயம்
உடன் மகாகாயமோடு ஒன்றும் சடமாம்
உடல் அகலுங்கால் உடல்உள ஆன்மாவும்
உடன் பரமான்மாவாய் உறும்.

பொழிப்புரை: குடம் உடையும் பொழுது குடத்துட் பொருந்திய ஆகாயம் மகாகாயமோ டைக்கியமாம். அவ்வாறே ஜடவுடல் மாயும் பொழுது அவ்வுடலுட் பொருந்திய ஜீவான்மாவும் பரமான்மாவோ டைக்கியமாம்.

விசேடவுரை: இவ்வாறு கூறினுரேனும், இவ்வுதாரண வலியால் உய்த்துணரவல்லார்க்குக் குடத்துளவாகாயம் மகா காயத் தினின்று முதலிற் குடத்தாற் பிரிவுபட்டதே யின்றுதலின், அக்குட முடையுங்கால் அவ்வாகாயம் மகாகாயமோடு மீளக்கலக்கும் என்றது, முதலிற் பிரிவு பட்டதாகத் தன் மதிமயக்கத்தாற் கருதினுர் கருத்தைப் பற்றியாதல் போல, ஜீவான்மாவும் பரமான்மா வினின்று ஜடவுடலாலென்றும் பிரிவுபட்டதே யின்றுதலின் அவ்வுடலகலுங்கால் அந்த ஜீவான்மாவும் பரமான்மாவோடு மீளக்கலக்கு மென்றதும், முன்னர்ப் பிரிவுபட்டதாகப் பேதுற்றுர் பேதமதியைப் பற்றி யென்றறிக. ஆகாயம் போன்று ஆன்மாவும் பிரிவுபடவோ படுத்தவோ முடியாத ஒரே முழு முதற்பொருளாம்; ஆதலின் விசாரிக்குங்கால் விபத்திபத்திகளுக்கோ வியோக யோகங் களுக்கோ அவ்வான் மாவிற்சற்று மவகாசமில்லையென உயரிய தோருண்மை

இத்திருவெண்பாவில் அறிஞர்க்குய்த்துணர வைக்கப்பட்டது. கன்மத்தில் அகன்மத்தைக் காணுமாறு போல உருவத்தில் அருவத்தைக் காணவல்லார்க்கு இவ்வுண்மை எளிதிற் புலனும். இத்திருவெண்பா எடுத்துக் காட்டுவமையணி.

When the pot breaks, the space in the pot
Merges one with the great Space.
When the inert body passes away,
the Self, seemingly in the body,
Becomes immediately one with the Supreme Self. (53)

इत्युक्त माधिकारेण
सर्वज्ञेना धिकारिणा ॥
सर्व बंधा द्वि निर्मुक्तः
सर्वज्ञ स्सर्वगो भवेत् ॥९४॥

इति उक्तं अधिकारेण सर्वज्ञेन अधिकारिणा ।
सर्व बन्धात् विनिर्मुक्तः सर्वज्ञः सर्वगः भवेत् ॥

Ityukta madhikāreṇa sarvajñenādhikariṇā
sarva bandhād vinirmuktaḥ sarvajñas sarvago bhavet

என்றதி காரியா யெல்லா முணரீச
னன்றதிகா ரத்தொடிவ் வாறறைந்தான் -
[வென்றெல்லாப்
பந்தங்க ளின்வீடு பற்றிஞேன் முற்றுணர்வோ
டந்தமிலா தெங்குமுள ஞும்.

என்று அதிகாரியாய் எல்லாம் உணர் ஈசன்
அன்று அதிகாரத்தொடு இவ்வாறு அறைந்தான்
வென்று எல்லாப்
பந்தங்களின் வீடு பற்றிஞேன் முற்றுணர்வோடு
அந்தம் இலாது எங்கும் உளஞும்.

பொழிப்புரை: *என்று (எவர்க்கும், எவைக்குந்) தலைவனுய் எல்லா முணர்ந்த ஈசன் அன்று தன்ஞணையால் இவ்வாறருளினன். எல்லாக் கட்டுகளையுமறுத்து அவற்றி*

னின்று விடுதலே யடைந்தோன் (என்போன்று தானும்) முற்று முணர்ந்தவனுய் எல்லேயிலா தெங்கு நிறைந்துளோனுவான்.

விசேடவுரை: அந்தமிலாது - அழிவற்று என்றுமாம். இவ்வாறென்றது முன்னர்க் கூறிய தன்றிப் பின்னர்க் கூறுவதுமாம்.

Thus, the Lord who is omniscient
Spoke with authority then,
"One who is liberated, severed from all bondage,
Becomes all pervasive, endless,
With absolute Awareness". (54)

तदागमान् संपरिहृत्य सर्वान्
शुचिं गृहीत्वाऽऽत्म समाधि योगम्॥
अस्मात्परं नान्यदिहास्ति किंचित्
ज्ञात्वैव संत्यज्य मनो विकल्पम्॥६५॥

विज्ञानमेवं समुपास्य विद्वान्
विशत्यकायं सततम् नियुक्तः॥
सर्वत्रगामी भवतीह मुक्तः
तद्धर्म धर्मी बहिरंत संस्थः॥६६॥

तत् आगमान् संपरिहृत्य सर्वान्
शुचिं गृहीत्वा आत्म समाधि योगम्।
अस्मात् परं न अन्यत् इह अस्ति किंचित्
ज्ञात्वा एव संत्यज्य मनः विकल्पम्॥

विज्ञानं एवं सम् उपास्य विद्वान्
विशति अकायं सततं नियुक्तः।
सर्वत्रगामी भवति इह मुक्तः
तत् धर्म धर्मी बहिः अन्तः संस्थः॥

Tadāgamān samparihṛtya sarvān
śuchim gṛhītvā'tma samādhi yogam
asmātparam nānyadihāsti kinchit
jñātvaiva santyajya mano vikalpam

Vijñānamevam samupāsya vidvān
viśatyakāyam satatam niyuktaḥ
sarvatṛagamī bhavatīha muktaḥ
taddharma dharmī bahiranta samsthaḥ

ஆகமங்க ளெல்லா மறவிட் டமலான்ம
யோக சமாதியே யுற்றிதன்மே - லாகவய
லொன்றுமே யின்றெனு வோர்ந்தே மனவிகற்ப
மொன்று முரும லொழித்து.

விஞ்ஞான மிங்ஙன் விடாதுன்னி யோகிதா
னெஞ்ஞான்று மெய்துமுட லின்மையச் - சுஞ்ஞானி
யத்தரும தர்மி யகம்புறமு மார்முத்த
னெத்தலமு மேகுவனு மே.

ஆகமங்கள் எல்லாம் அறவிட்டு அமல ஆன்ம
யோக சமாதியே உற்று இதன் மேலாக அயல்
ஒன்றுமே இன்று எனு ஓர்ந்தே மனவிகற்பம்,
ஒன்றும் உருமல் ஒழித்து.

விஞ்ஞானம் இங்ஙன் விடாது உன்னி யோகி தான்
எஞ்ஞான்றும் எய்தும் உடல் இன்மை அச் சுஞ்ஞானி
அத்தரும தர்மி அகம் புறமும் ஆர் முத்தன்
எத்தலமும் ஏகுவனுமே.

55 & 56 பொழிப்புரை: *(பயின்றுவந்த) ஆகமங்களெல்லாம் பற்றறவிட்டுப் பரிசுத்தமான ஆன்மயோகமாகிய சமாதியே யடைந்து, இதன்மேற் பயில வேறொன்றுமே யின்றென வறிந்து, மனவிகற்பஞ் சற்று மெழாது கெடுத்து, விஞ்ஞான சொரூபத்தை இவ்வாறிடைவிடா தெண்ணி அவ்வான்ம யோகியாவான் அசரீரத்தன்மையை (நான் இவ்வுடல் அன்று என்னும்) எந்நாளுமடைவன்; அடைந்து, அம்மெய்ஞ் ஞானியாகிய முத்தன் அந்தத் தருமமே பொருந்திய தருமியாய்,*

உள்வெளியெங்கும் நிறைந்தவனுய், எவ்வுலகத்துஞ் செல்ல வல்லவனுவன்.

Discarding totally all the agamas,
Attaining the pure samadhi of Atma yoga,
Realising, by due enquiry,
there is nothing else greater than this,
Destroy all wrong ideas, in the mind,
of differences. (55)

Meditating continuously
on the great Knowledge thus,
That yogi who attains ever the body-less nature,
That pure jnani whose dharma
is the dharma of That (bodiless nature) alone,
Is the liberated one, shining inside and out,
reaching across to every place. (56)

सर्वज्ञता तृप्तिः अनादि बोधः
स्वतन्त्रता नित्यं अलुप्त शक्तिः॥
अनन्त शक्तिश्च निरामयात्मा
विशुद्ध देहः स शिवत्व मेति ।९७॥

सर्वज्ञता तृप्तिः अनादि बोधः
स्वतन्त्रता नित्यं अलुप्त शक्तिः ।
अनन्तशक्तिः च निरामयात्मा
विशुद्ध देहः स शिवत्वम् एति ॥

Sarvajñatā tṛptiranādi bodhaḥ
svatantratā nityamalupta śaktiḥ
anantaśaktischa nirāmayātmā
viśuddha dehaḥ sa śivatvameti

முற்றுணர் வின்பமொடு மூதறிவு தன்வயம்
வற்றல் வரம்பில் வலியுமிவை - யுற்றென்று
மாரு நிராமய வான்மா வவன்சிவமே
சேரும் விசுத்தவுடல் சேர்ந்து.

முற்றுணர்வு இன்பமொடு மூதறிவு தன்வயம்
வற்றல் வரம்பு இல் வலியும் இவை உற்று என்றும்
ஆரும் நிராமய ஆன்மா அவன் சிவமே
சேரும் விசுத்த உடல் சேர்ந்து.

பொழிப்புரை: முற்றுமுணர்வு, வரம்பிலா வின்பம், இயற்கையறிவு, தன்வயம், என்றுங் குன்றுத வாற்றல், எல்லையிலா வாற்றல் — இவற்றையுற்று, இயல்பாகவே பாசங்களினின்று நீங்கிய வான்மா, தூயவுடம்பு — இவையும் பொருந்தி இவ்வாற்றலவன் பூரண சிவத்தை நிலைபெறச் செய்வான்.

விசேடவுரை: சிவனதெண்குணங்களும் அவனுக்குளவாம் என்பதாம்.

சிவபூரணமான உண்மை நிலையில் நின்று நோக்க முப்புடியோடு கூடிய முற்றுமுணர்தல் முதலியன ஒரு பொருளன்றுகவும் அவற்றைப் பெறலரும்பேறுகள் போல நூல்கள் சிறப்பித்துக்கூறல் மாயாகாரிய உலகத்துழன்று மயங்கும் மக்கட்கு ஆன்மசாட்சாத்கார மடைதலில் வேட்கையும் விடாமுயற்சியும் ஒருங்கு விளைத்தற்கென்க.

Omniscience and bliss, and mature wisdom,
Remaining independent
limitless strength —
Attaining all these, he shines ever,
the Self without afflictions,
With an immaculate body,
he, as the Self, merges in Siva. (57)

न जपो नार्चनं स्नानम्
न होमो नैव साधनम्॥
धर्माधर्म फलं नास्ति
न पिंडो नोदक क्रिया॥५८॥

न जपः न अर्चनं स्नानं न होमः न एव साधनम् ।
धर्म अधर्म फलं नास्ति न पिण्डः न उदक क्रिया ॥

Na japo nārchanam snānam na homo naiva sādhanam
dharmā'dharmaphalam nāsti na piṇḍo nodakakriyā

நாமசெப மர்ச்சனை நன்னீரி லாடலு
மோமமுஞ் சாதனமற் ரொன்றுமின் - ரூமே
தருமாதர் மப்பலன்கள் பிண்டமொடு தண்ணீர்க்
கிரியைகளு மில்லையாங் கேள்.

நாம செபம் அர்ச்சனை நன் நீரில் ஆடலும்
ஓமமும் சாதன மற்ரொன்றும் இன் ரூமே
தரும அதர்மப் பலன்கள் பிண்டமொடு தண்ணீர்
கிரியைகளும் இல்லையாம் கேள்.

பொழிப்புரை: நாமஜெபம், நாமாருச்சனம், நல்ல நீராடல், ஓமம் எனுமிவையும் இவைபோன்ற பிற சாதனங்களும் அவனுக் கொன்றுமே யின்ரும். பிண்டமிடல், நீரிறைத்தல் ஆகிய பிதிரர் காரியங்களுமுட்பட அவனுக் கிலவாம். இருவினைப் பயன்கள் அவனைச் சற்றும் தொடராவாம்.

விசேடவுரை : நாமம் அருச்சனையோடுங் கூட்டப்பட்டது.

Japa of the name, worship,
bathing in holy waters, ritual sacrifices,
None of these or others are needed.
The fruits of dharma and adharma,
Water oblations to forefathers,
None of these are for him. (58)

नियमानि न तस्या स्ति
नोपवासो विधीयते ॥
प्रवृत्ति श्च निवृत्ति श्च
ब्रह्मचर्य व्रता नि च ॥५९॥

नियमानि न तस्य अस्ति न उपवासः विधीयते ।
प्रवृत्तिः च निवृत्तिः च ब्रह्मचर्य व्रतानि च ॥

niyamāni na tasyāsti nopavāso vidhīyate
pravṛttischa nivṛttischa brahmacharya vratāni cha

இல்லை நியமங்க ளில்லையுப வாசமு
மில்லை பிரவிருத்தி யெவ்வகையு - மில்லை
நிவிருத்தி நேர்பிரம சாரி விரத
மவற்கில்லை யென்றே யறி.

இல்லை நியமங்கள் இல்லை உபவாசமும்
இல்லை பிரவிருத்தி எவ்வகையும் இல்லை
நிவிருத்தி நேர் பிரமசாரி விரதம்
அவற்கு இல்லை என்றே அறி.

பொழிப்புரை: *அவனுக்கு நியமங்களில்லை. உபவாசமு மில்லை. பிரவிருத்தி நிவிருத்தி தன்மங்கள் எவ்விதத்துமில்லை. நேர்மையான பிரமசாரி விரதமுங் கூட இல்லை என்றறி.*

No injunctions for observance, no fasts,
Nothing required by way of getting into
or out of (any action),
No vows of celibacy for him, know this. (59)

अग्नि प्रवेशनं नास्ति
पतनं भृगु नोदके ॥
शिवज्ञान मृतं पीत्वा
विचरस्व यथा सुखम् ॥
शिववच्छा श्वतः शुद्धः
सृष्टि धर्म विवर्जितः ॥ ६० ॥

अग्नि प्रवेशनं न अस्ति पतनं भृगुना उदके ।
शिवज्ञान अमृतं पीत्वा विचरस्व यथा सुखम् ।
शिववत् शाश्वतः शुद्धः सृष्टिधर्म विवर्जितः ॥

Agnipraveśanam nāsti patanam bhṛgunodake
sivajñānāmṛtam pītva vicharasva yathāsukham
śivavach chhāśvataḥ śuddhaḥ sṛshṭidharma vivarjitaḥ

அங்கிநீர் வீழ்வசல நின்றுவிழ லற்றுசிவ
துங்களுா ணுமுதந் துய்த்துசிவ - அங்களுய்
நித்தியளுய் நின்மலளுய் விட்டுச் சிருட்டிதன்மஞ்
சித்தம்போற் சஞ்சாரஞ் செய்.

அங்கி நீர் வீழ்வு அசலம் நின்று விழல் அற்று சிவ
துங்க ஞாளுமுதம் துய்த்து சிவ அங்களுய்
நித்தியளுய் நின்மலளுய் விட்டுச் சிருஷ்டி தர்மம்
சித்தம் போல் சஞ்சாரம் செய்.

பொழிப்புரை: நெருப்பில் விழல், நீரில் விழல், மலை நின்றருளல் இவை யொன்று மின்றி சிறந்த சிவ ஞாளுமுதம் பருகி, சிவசொரூபளுய், என்றுமுள்ளவளுய், மலமற்றவளுய், படைப்பு முதலிய தொழில்களினின்று விடுபட்டு, மனம்போல் வாழக் கடவை.

Not having any recourse
to falling into the fire or water,
Or falling from the mountain top,
Enjoy the feast of the Knowledge of Siva,
eternal and pure,
Rid of the rules applying to all creation,
move about as you please. (60)

सत्यं सत्यं पुनः सत्यम्
त्रिसत्यं च मयाकृतः॥
अतः परतरं नास्ति
विज्ञेयं कुत्र चिद्गुह ॥ ६१॥

सत्यं सत्यं पुनः सत्यं त्रिसत्यं च मयाकृतः ।
अतः परतरं नास्ति विज्ञेयं कुत्रचित् गुह ॥

Satyam satyam punaḥ satyam trisatyam cha mayākṛtaḥ
ataḥ parataram nāsti vijñeyam kutrachitguha

சத்தியஞ் சத்தியஞ் சத்தியமென் றேமூன்று
சத்திய மிப்போது சாற்றினே - னுத்தமம்
மிக்க திதிலெங்கும் வேறெதுவு மேதெரியத்
தக்க திலீலகுகனே தான்.

சத்தியம் சத்தியம் சத்தியம் என்றே மூன்று
சத்தியம் இப்போது சாற்றினேன் உத்தமம்
மிக்கது இதில் எங்கும் வேறு எதுவுமே தெரியத்
தக்கது இலை குகனே தான்.

பொழிப்புரை: வாய்மை, வாய்மை, இது வாய்மை — என்று மும்முறை இப்போது (உன்பொருட்டு) ஆணை யிடுகின்றேன். இதனைக்காட்டிலும் உயர்வாயுணரத் தக்கது வேறெதுவும் எங்கும் இல்லை; எனவே, குகனே, இதுவே யாவற்றிலும் சிறந்ததாம்.

I tell you this is the Truth,
the Truth, the Truth, thrice over.
There is nothing greater than this,
Nothing greater is there to be known,
Nothing at all, nowhere ever. (61)

विमलेति सर्व भावान्
विमलात्मा विमलबुद्धिरमूढधीः॥
सर्वं विमलं पश्यति
विमलो विमलेन भावेन॥६२॥

विमल इति सर्व भावान्
विमल आत्मा विमलबुद्धिः अमूढ धीः ।
सर्वं विमलं पश्यति
विमलः विमलेन भावेन ॥

Vimalethi sarva bhāvan
vimalātmā vimalabuddhiramuḍhadhiḥ
sarvam vimalam paśyati
vimalo vimalena bhāvena

அமலனு மூடமதி யல்லனுய்ப் புத்தி
நிமலனுய் நின்மலான் மாவாய் விமலமாம்
பாவத்தி னுல்விமலம் பார்ப்பவெலா மென்றமலம்
பாவித்துப் பார்த்திடுவன் பார்.

அமலனும் மூடமதி அல்லனுய்ப் புத்தி
நிமலனுய் நிர்மல ஆன்மாவாய் விமலமாம்
பாவத்தினுல் விமலம் பார்ப்ப வெலாம் என்று அமலம்
பாவித்து பார்த்திடுவன் பார்.

பொழிப்புரை: *மலமற்றவனும், மடமையற்றவனும், தெளிந்த புத்தியுடையவனும், விசுத்தான்மாவுமாய், அவன் பரிசுத்தான்மாவை (இடைவிடாது) எண்ணி, அப்பரிசுத்த வெண்ணத்தால் பார்ப்பவற்றை யெல்லாம் அவ்வாறே பரிசுத்தமாகப் பார்ப்பன்.*

விசேடவுரை: *கண்ணெப்படி காட்சியுமப்படி யாதலால், விமலமாம் பாவத்தினுல் பார்ப்ப வெலாம் விமல மென்று பார்த்திடுவன் என்றும், அவ்விமல பாவத்தை யெய்தற் குபாயங் கூறுவார் அமலம் பாவித்து என்றுங் கூறினர்.*


Rid of any blemish, rid of ignorance,
with pure intellect, being the pure Self,
By the pure conviction that all that is seen is pure,
Meditating on the immaculate nature,
He shall attain Awareness. (62)

ஸ்ரீ ரமணர்ப்பணமஸ்து

इति
श्री सर्वज्ञोत्तरे,
ज्ञान पादे,
स्वात्मसाक्षात्कार प्रकरणं
संपूर्णम्.
ॐ तत्सद्ब्रह्मार्पणमस्तु.

संसारार्णवमग्नानां भूतानांशरणार्थिनाम् ।

नान्यः शरणदः कश्चित् आत्मज्ञानादृतेक्वचित् ॥ २४ ।



To the jiva drowning in the vast ocean of birth-death cycle,

And seeking a refuge,

What affords refuge is only that knowledge of the Self,

Not anything else — know this.

AtmaSakshatkaraPrakaranam, v.24